165

வார இதழ்

ஆசிரியர்: மு. கருணாநிதி..

2 அணா

முரசு 2 | சென்னை | 1—7—55 | வெள்ளி | ஒலி 14

ஐ. நா. செல்வோம் —
அடிமை விலங்கொடிப்போம்!

எள்ளுரை, ஏகடியம் - இனிச் செல்லாது!

அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்கள், "திராவிட நாட்டுப் பிரிவினை பிரச்னையை ஐக்ய நாடுகள் சபைக்குக் கொண்டு செல்லும் நேரமொன்று வரத்தான்போகிறது" என்று!

அறிஞர் விவேக உரை கேட்டு எள்ளுரையும்-இழிவுரையும் நம்மைத் தேடிவந்தன. கல்லும் கரைந்துவிடும்; அவரது பேச்சு கேட்டு! ஆனால் இந்தக் கல் நிகர்த்த தோழர்களோ அலட்சிய வார்த்தைகளை நம்மீது காரி உமிழ்ந்தார்கள்!

"ஐ. நா. என்ன, சினிமாக் கொட்டகையா?"—என்று சீறி விழுந்தார், சிலம்பெடுக்கும் சீலர்! சீழ்நாறும் மையினுல் நல்ல காகிதத்தைச் சீய்க்கும் தோழர் ஐ. நா. வை எட்டாத நிலவென்றும்-கிட்டாத பழமென்றும் நினைத்துவிட்டார் போலும்!

அவர் மட்டுமா? 'அகில உலகம்' பேசும் நண்பர்கள்கூட காய்ந்து விழுந்தார்கள். "அப்பேறபட்ட செஞ்சீனத்தாலேயே ஐ. நா. சபையில் பிரதிநிதித்வம் பெற முடியவில்லை; இந்த 'அன்னக் காவடி'களா சான்பிரான்சிஸ்கோ சென்று ஐ. நா.வின் கதவுகளைத் தட்டப் போகின்றன?" என்று ஏகடியம் பேசினார்கள், புல்கானின் நேருவைப் பார்த்து புன்சிரிப்பு காட்டியதும் எதிர் முகாமிலிருந்து கொண்டு ஏற்றி வைத்த செங்கொடியைத்தாழ்த்த நினைக்கும் வீரர்கள்!

முன்பு ஐ. நா. விலே தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த பாதிரி ஒருவர் நிறபேதக் கொள்கையை எதிர்த்து மலான் துரை மீது சரமாரியான குற்றங்களைச் சாட்டினார். மரம்போல் நின்று, நிறவெறியரின் மனம்போல் நடக்கட்டும்' — என்று தூங்கி வழிந்தவர்களை ஒரு கிறித்தவப் பாதிரியார் தூக்கி நிறுத்தினார். கண்களை அகட்டி, கருத்துக் கதவைத் திறந்து, மருட்டுகின்ற நிறவெறியர் நாட்டில் வளர விட்டிருக்கும் கள்ளிகளைச் சுட்டிக் காட்டினார்! அவை களையப்படாவிட்டால் இருபதாம் நூற்றாண்டில் நாம் தவழ்ந்து வந்திருக்கிற முன்னேற்றப் பாதை முள் நிறைந்த பாதையாகிவிடும்—என்பதை எடுத்துக் காட்டினார்.

—இதே நிகழ்ச்சியை நாமும் எடுத்துக் காட்டினோம், நம்மை ஏலாதார் என்னும் கண்ணாடி மாளிகையிலே வாழும் கனவான்களுக்கு! ஏற்கவில்லை, அவர்கள்; இழிவுரையையும் நிறுத்தவில்லை!

இப்போது அவர்களுடைய கண் திறக்கும் காலம் வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது.

ஐ. நா.விலே நாடுகள்தானே அங்கம் வகிக்கின்றன; அதன் மூலம் நாடாளும் ஒரு கட்சிக்காரர்கள்தானே தங்கள் எண்ணத்தை வெளியிட முடிகிறது; பொது மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை ஐ. நா. தெரிந்து கொள்ளவேண்டாமா? எனவே மக்களின் பிரதிநிதிகளை ஐ. நா. வுக்கு அழைத்து அவர்களையும் பேசவைக்க வேண்டும் என்ற கொள்கை இன்று காட்டுத் தீயென வளர்ந்து, நாம் காட்டிய பாதையை காண மறுத்தோருக்கு ஒளி காட்டுகிறது.

சென்ற கிழமை ஐ. நா. சபையின் பத்தாவது ஆண்டுவிழா சம்மந்தப்பட்ட பம்பாய் நிகழ்ச்சியிலே கலந்து கொண்ட டாக்டர் ஜான் மத்தாய் இந்தக் கருத்துக்களுக்கெல்

★ தொடர்ச்சி 10 பக்கம்

அங்கும்......

● அமெரிக்காவின் மாஜி ஜனாதிபதி **ட்ரூமன்** சமீபத்தில் கலந்து கொண்ட நிகழ்ச்சி:

—ஐக்ய நாடுகள் சபையின் பத்தாவது ஆண்டு விழாக் கூட்டம்.

★

● இந்தியாவின் மாஜி கவர்னர் ஜெனரல் **ஆச்சாரியார்** சமீபத்தில் கலந்து கொண்ட நிகழ்ச்சி:

—தருமபுர ஆதின திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தின் ஆஸ்தீகப் பிரசங்கம்.

......இங்கும்!

● இங்கிலாந்தின் மாஜி முதல் மந்திரி **சர்ச்சில்** பெறப் போகிற விருது:

—சுதந்திரத்திலே உள்ள பற்று, தணிவு, தலைமை வகிக்கும் தகுதி — ஆகிய திறமைகளைப் போற்றி அமெரிக்க பீடம் அவுஸ்' அளிக்கும் பதக்கம்!

★

● சென்னை மாநிலத்தின் ஜீ முதலமைச்சர் **ஆச்சாரியார்** பெற்ற விருது:

—தருமபுர ஆதீனம் போர்த்திய பொன்னாடை!

'கலிப்படம்'
(பக்கம்-2)

'வாழமுடியாதவர்கள்'
பாகம்-2 (பக்கம்-9)

Best copy available

கலப்படம்

"வரப்போகும் மரணத்திற்குப் பின் யாதோ என்னும் பயம்தான் மதம்"

—ஜார்ஜ் எலியட்.

வரப்போகும் தேர்தலுக்குப் பின் யாதோ என்னும பயம் தான் இன்றைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

—ஜீவானந்தம்.

★

"கேளுங்கள்-அப்போது கொடுக்கப்படும். தட்டுங்கள்—அப்போது திறக்கப்படும்"

—ஏசுநாதர்.

நான் தட்டிக் கொண்டுதான் இருக்கிறேன். சட்டசபையின கொல்லைக் கதவு திறக்கப்படவில்லையே!

—ஆச்சாரியார்.

★

"நல்லவர்களைப்பற்றி நிறையப் படிக்கலாம்; பேசலாம்; பாராட்டலாம்; — ஆனால் நல்லவராக இருப்பதுதான் மிகக் கடினம்."

—ஈசாப்.

பச்சைத் தமிழர்களின் பெருமையைப் பற்றி படிக்கலாம்; பேசலாம்; பாராட்டலாம்—ஆனால்,அக்ரகாரத்தின் மிரட்டலுக்குப்பயப்படாத பச்சைத் தமிழனாக இருப்பதுதான் மிசக் கடினம்; மெத்தக் கடினம்.

—காமராசர்.

★

"தன் மகளைவிட தான் பத்து வயசு இளமையாகத் தோன்றினால், ஒரு பெண்ணுக்கு பூரண திருப்தி உண்டாகவிடும்!"

—ஆஸ்கார் ஒயில்ட்.

சண்ணீர்த் துளிகளுக்குச் செல்வாக்கு குறைந்து வருகிறது-என்றால் எங்களுக்குப பூரண திருப்தி உண்டாகிவிடும!

—ஒரு பன்னீர்த் துளி.

★

"தலை சுழல்பவன் தரணியெல்லாம் சுழல்வதாக எண்ணுகிறான்"

—ஷேக்ஸ்பியர்.

தி. மு. சழகத்தில் கொள்கையில்லை; திட்டமில்லை; தீர்மானமில்லை!

—மதுரை பதுக் காங்கிரஸ்வாதி.

★

"இன்றுள்ள நிலையிலே சிறைச்சாலையின் உள்ளே கிடக்கும் குற்றவாளிகள் செய்த எந்தக் குற்றத்தையும்விடப் பெரியது அவர்களைச் சிறைப் படுத்தியக் குற்றம்தான்!"

—பெர்னட் ஷா.

அந்தக் குற்றத்திற்கு எங்கள் அரசாங்கம் தரும தண்டனைதான் போலீஸ்காரர்களுக்கு அளிக்கப்படும் பெரும் பரிசும், பாராட்டுரையும்!

—நாஞ்சில் தமிழன்.

★

"அடுத்த வீட்டுக்காரன் வெற்றியைக் கண்டு பொறாமைக்காரன் மெலிகிறான்."

—ஷோரேல்.

ஆச்சாரியாருக்கு சில நாட்களாக கடுமையான காய்ச்சலாம்!

—காமராசர்.

★

"தியாகம் செய்யாமல் எந்த நாடும் முன்னேற்றம் அடைந்ததில்லை. தியாகம் செய்வது என்பது குற்றம் செய்யாதவனால் தான் முடியும். குற்றம் புரிபவன் தியாகம் புரிந்தால் அதற்கு பொருள் கிடையாது"

—மாண்டெஸ்க்யூ.

ஆமாம்—பொருள் கிடையாது; நிலம்தான் கிடைக்கும்!

—'ஆகஸ்ட் வீரன்'

★

"மெய் பாதரட்சை தரித்துப் புறப்படுமுன் பொய் உலகத்தை வலம் வந்து விடுகிறது"

—ஸ்பர்ஜன்.

செய்தி இரண்டாவது ஆளுக்கு எட்டுவதற்குமுன் வதந்தி எங்கள் பததிரிகையில் அச்சாகி விடுகிறது.

—'தினத் தந்தி'

★

"மனைவி கிரேக்க மொழியில் பாண்டித்யம் பெற்று, அதிமேதாவியாய் விளங்குவதைவிட, அவள் தனக்கு நல்ல உணவு பரிமாறுவதைத்தான் மனிதன் அதிகமாக விரும்புகிறான்"

—சாமுவல் ஜான்சன்.

அந்த மனிதனை நான் முழு மனதோடு வெறுக்கிறேன். எனக்கு உணவு பரிமாற சமையற்காரர்கள இருக்கிறார்கள்!

—பெரோஷ் காந்தி (இந்திரா காந்தியின் கணவர்)

★

ஆசியாவின் அரசியல் வியாதி!

★

தொத்து நோயைவிடக் கடுமையான வியாதியொன்று இன்று ஆசியாவைப் படையெடுத்திருக்கிறது. காலனி ஆதிக்கத்தை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தியோரெல்லாம் இன்று அந்த நோய்க்கு இலக்காகிவிட்டார்கள்!

உள்ளூரிலே விலை போகாத மாடுகளை வெளியூர்ச் சந்தைக்கு அழைத்துப் போவார்கள். இதைப் போலவே உள்நாட்டில் தங்கள் பேரும், புகழும் தேய்பிறையாகிவிட்டால், ரோமத் தளகர்த்தர்கள் வெளிநாட்டின்மீது படையெடுத்துச் சென்று, வாகை மாலையுடனும், வரவேற்பு வைபவங்களுடனும் தாயகம் திரும்புவார்களாம். இழந்த பெயரை புதுப்பித்துக் கொள்ள அவர்கள் காட்டிக் கொடுத்த அந்த வழிதான் இன்று வியாதியாக வளர்ந்துவிட்டது.

சென்ற கிழமை இந்தியப் பிரதமர் நேரு, ரஷ்யாவிலிருந்து பயணமாகி போலந்து நாடு சென்றார்.

ரோமர்கள் சைன்யத்துடன் சென்றார்கள். இந்தப் புதிய ரோமர்களோ ஒரு பத்திரிகை நிருபர் குழுவுடன் ஒவ்வொரு நாட்டையும் முற்றுகை யிடுகிறார்கள்!

சரித்திரம் எழுதிய நேருவைப் பின்பற்றி, ஆசியாவின் அரசியல் தலைவர்கள் அத்தனை பேரும் வளர்பிறையாவதற்கு மோதலால் மைந்தரையே பின்பற்றுகின்றனர்!

'வளர்பிறை வைத்தியம்!'

இந்தோனேஷியாவின் பிரதமர் ஜோஜோ சென்ற வாரம் செஞ்சீனா சென்று 'வளர்பிறை வைத்தியம்' செய்து கொண்டார்.

தாய்லந்தின் முதல்வர் சென்ற கிழமை இங்கிலாந்து சென்று எலிசபெத் ராணியாருடன் விருந்து சாப்பிட்டார். சுருண்டுபோன தாய்லந்து மக்களுக்கு ஆந்தொனி ஈடனுடன் தான் கைகுலுக்கும் காட்சியை போட்டோ எடுத்து அனுப்பினார். அங்கிருந்தபடியே அவர் அமெரிக்காவுக்கும் போவாராம்!

சாவூதி அரேபியாவின் பிரதமர் காபூலிலே உலாவுகிறார்! கராச்சியிலே வட்டமிடுகிறார்!

பர்மாவின் பிரதமர் யூநூ சமாதானம் வேண்டி யாத்திரை புறப்பட்டிருக்கிறாராம. போட்டி போட்டுக் கொண்டு நேருவுக்கு முன்பாகவே அவர் பெல்கிரேட் நகர் சென்று மார்ஷல் டிட்டோவைச் சந்தித்துவிட்டார்!

பாகிஸ்தானத்து அரசியல் நிர்ணய சபையிலே முஸ்லிம் லீகிற்கு 'மெஜாரிட்டி' இல்லாமற் போய்விட்டதல்லவா? இதை மாற்றிக்கொள்வதற்காக முகமதலி இன்னும் கொஞ்ச நாட்களில் செஞ்சீனம் செல்லப் போகிறாராம—கராச்சியிலிருந்து இப்படிச் செய்தி வந்திருக்கிறது!

இலங்கைப் பிரதமர் கொத்தலவாலை சில மாதங்களுக்கு முன்புதான் வாஷிங்டன் சென்று ஐசன் துரையைத் தரிசித்து வந்தார்.

அவ்வளவு ஏன்? கடுகளவு மைசூரின் மலைபோன்ற மகாராஜா கூட இந்த வாரம் ஆப்பிரிக்காவுக்குப் புறப்பட்டிருக்கிறார்!

மாஜிகளாகாமலிருக்க மந்திரிகளெல்லாம் தேசாந்திரம் போகிறார்கள்! ஆசிய ஜோதிகள் அணைந்துவிடாமலிருக்க நாடுவிட்டு நாடு பறந்துகொண்டிருக்கின்றன!

ஆசியாவைப் பிடித்திருக்கும் இந்த வியாதி எப்போது தொலையப் போகிறதோ? எப்போது இந்த 'நாடோடிப் பிரதமர்கள்' சொந்த நாட்டுப் பிரச்னைகளில் தங்கள் கவனத்தைத் திருப்பப் போகிறார்களோ?

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 1—7—55 வெள்ளி

ஏமாற்றம்!

"காமராசரை பெண்ணுடை ஆண் என்றுதான் நினைத்திருந்தேன். அது தவறு. அவர் பெண்ணேதான்!"

—என்று அண்ணா அவர்கள் காமராசரைப் பற்றி திருச்சியிலே குறிப்பிட்டார். ஆணுடையிலே ஆச்சாரியாரை விரட்டிய வீரர் ஆட்சி பீடம் ஏறியதும், வட நாட்டு பக்தி எனும் பெண்ணுடை பூண்டார். கல்லக்குடி வழங்குவதற்கு நாணினார். ஆச்சாரியார் நம்மீது ஏற்றி வைத்த சதி வழக்குகளை வாபஸ் பெறுவதற்கு வெட்கப்பட்டார்.

அந்த நிலை இன்று மாறிவிட்டது. 'உடையிலே மட்டுமல்ல; உள்ளப் பாங்கிலும் நான் பெண்ணேதான்!' என்று குன்று மேல் நின்று கொக்கரிக்கிறது அவரது செயல். ஆண்மைத் திறன் சிறிதுமில்லாமல் அக்ரகாரத்தின் உருட்டு விழிக்கும், மிரட்டல் மொழிக்கும் பயந்து, தீண்டாமைச் சுவரொட்டிகளை அவர் தூக்கி எறிந்த பண்பைத்தான் அண்ணா அவர்கள் 'பெண்மை' என்று குறிப்பிடுகிறார் என்பது விளங்காமற் போகாது.

பெண்களைப் பெருமைக் குறைவாகக் கருதும் கூட்டமல்ல, நாம். ஆணுக்குத்தான் ஆளத் தகுதி உண்டு— என்கிற எண்ணமும் நம்மிடத்தில் இல்லை. ஆனால் அரசியல் துறையிலே ஆணாக இருந்தவர்— மான் விழி சுழற்றும் பெண்ணாக மாறிவிட்டது பூரிப்படையும் செய்தி அல்ல— நெஞ்சைப் புண்ணாக்கும் நிகழ்ச்சியாகும்!

அண்ணா குறிப்பிட்ட அந்தப் பெண் 'செம்புலப் பெயல் நீர் போல' கணவனுடன் கலந்து குலக் கொடியாய், குடும்ப விளக்காய் இருந்திருந்தால் நாம் ஆயாசப்பட மாட்டோம். அந்தோ, பரிதாபம்! அவள் ஆள் மயக்கும் ஆரணங்காக அல்லவா காட்சி தருகிறாள்!

அம்பல மேறியதுமே அந்தச் சிற்றிடை சுந்தரி தந்தை பெரியாரின் எரிமலைத் தணல் கொட்டும் வாயை தன் தளிர்க் கரங்களால் மூடினாள். 'சேவல் கனவானு'டன் சேர்ந்து சேஷ்டைகள் பல புரிந்தாள். இப்போதோ அந்த இரட்டை நாக்குக்காரி 'இந்து'வுக்கு சம்மதித்து இந்திர ஜாலம் செய்கிற இழிதகை போக்கு நம் கண்களுக்குக் காட்சியாகிறது.

அந்த மயக்குமொழிக்காரி மோகனாஸ்திரம் தொடுப்பதிலே மேனகாவை மிஞ்சியவள்; தேவ மாந்தரை தோல்வி காணச் செய்பவள். அந்தத் தோகை மயிலாளிடம் சிக்கிய கூட்டத்துள்ளே 'தென்னாற்காடு மாவட்டத்தாரி'ன் நிலைமைதான் இரங்கத்தக்கதாக இருக்கிறது. காமராணியின் கண் வீச்சு தனக்கு மட்டுமே உரிமையாக்கப்பட்டிருப்பதாக நினைத்து செருக்கோடு உலவிய ராமசாமி படையாச்சியார் இன்று சித்தம் சோர்ந்து விட்டார். அண்மையில் கடலூரில் கூடிய வன்னிய குல இளைஞர் சழகத்தின் கல்விச் சலுகை மாநாட்டு நடவடிக்கைகளைக் கவனித்தால் நிலைமைகளை நன்றாக உணரலாம்.

ஜில்லா போர்டு தேர்தல் மின்னல் வேகத்திலே நெருங்கியதும், எங்கே செத்துப் போன சேவல் இன உணர்ச்சிச் சூரணத்தால் புத்துயிர் பெற்றுவிடுமோ என்ற பீதி கொண்ட விருதுநகரார், திடீரெனத் தேன் மொழி கொட்டி தேர்தல் கானம் பாடினார். ஆமாம்; தேர்தல் சமயத்தில் வன்னியர் குல மாணவர்களுக்காக அவர் அளித்த கல்விச் சலுகையைத்தான் நாம் அப்படிக் குறிப்பிடுகிறோம்!

சலுகை கிடைத்தது; செத்துப் போன கோழியின் சவத்தை அழுகிப் போக அனுமதித்தனர், உழைப்பாளர் கட்சித் தோழர்கள்! அந்தப் பிண வாடை மூக்கைத் துளைக்கும் நேரத்திலேதான் காமராசர் அனுப்பிய காளை மாடு ஜெய பேரிகை தட்டியது.

பிறகு...?

தேர்தல் முடிந்தது; மறு தேர்தல் வருகிற வரையில் காமராசருக்கு தென் ஆற்காட்டை திரும்பிப் பார்க்க வேண்டிய தேவையும் இல்லாமற் போய் விட்டது.

முதலில் வன்னிய மாணவர்கள் எல்லோருக்கும் கல்விச் சலுகை தருவதாக அறிவித்தார்.

பிறகு; திருச்சி, தஞ்சை, சேலம், தென் ஆற்காடு— ஆகிய மாவட்டத்தில் உள்ளோருக்கு மட்டுமே சம்பளச் சலுகை என்றும், அதுவும் ஒரு வருஷ காலத்துக்குத்தான் என்றும் ஒரு திருத்தம் கொண்டு வந்தார்.

ஜில்லா போர்டு தேர்தல் யாவும் ஒரு முடிவுக்கு வந்த இந்த நேரத்திலோ, சலுகைகள் எல்லாம் 'குற்ற பரம்பரை'யைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான்- என்று தந்திரமாய் அறிவித்து விட்டார், விருதுநகரார்!

காரியம் ஆகிறவரையிலே சமுத்தைக் கட்டிக் கொண்டிருந்து விட்டு, பிறகு கழுத்தை நெறிக்கத் துணியும் காமராசரின் போக்கு கண்டு வன்னிய குல வாலிபர்கள் புலியாகப் பாய்கிறார்கள். எனவேதான் மாநாடு கூட்டி ஆட்சியாளருக்கு எச்சரிக்கை தர வேண்டிய பரிதாபமான நிலைமை உருவாகியிருக்கிறது.

உழைப்பாளர் கட்சியின் ஒப்பிலாத் தலைவர்-வன்னிய சமுதாயத்துக்கு வழிபுரைக்கும் தலைவர்- என்றெல்லாம் சொல்லப்படும் இராமசாமிப் படையாச்சியார் காமராசருக்குப் பக்கத்திலே கொலு வீற்றிருக்கிறார். சென்னை மாகாணத்துச் செங்கோல் பிடிக்கும் பணியிலே அவரது சுண்டு விரலும் சேர்ந்திருக்கிறது.

அப்படியிருந்தும் மாநாடு கூட்டி சிகப்பு விளக்கு காட்ட வேண்டிய நிலைமை எப்படி ஏற்பட்டது?

வன்னிய குல வாலிபர்கள் இந்த நிலைமையைச் சிந்திக்க வேண்டும். கடலூர் மாநாட்டிலே கலந்து கொண்டோரெல்லாம் கனல் கக்கும் அளவுக்கு தங்கள் வேதனையை வெளிக்காட்டியிருக்கிறார்கள். 'ஆவேசப் பிரசங்கங்கள்'—என்று தலைப்பு தருகிறது, 'சுதேசமித்திரன்' ஏடு!

மாநாட்டில் வரவேற்புரை வழங்கிய ராஜமாணிக்க வாண்டையார்,

"...இந்த நிலையில் நாம் காங்கிரஸ் கட்சியோடு ஒத்துழைப்பது சரியா இல்லையா என்ற கேள்விக்கு இடமாகி விட்டது. எதிர்பார்த்த கல்விச் சலுகை இல்லையெனின் காங்கிரசிலிருந்து பிரிந்து வேறு கட்சியமைத்து வருகிற தேர்தலில் பாடுபட்டு முன்னைவிட அதிக வெற்றி பெறும் வழியைத் தேட வேண்டும்"

—என்பதாகப் பேசியுள்ளார். அவர் மட்டுமா! திறப்புரையாற்றிய நாராயணசாமி படையாச்சியார் கூட,

"...நமது கோரிக்கையை அரசாங்கம் ஏற்று, அரசாங்கம் சலுகையை வழங்க மறுப்பின் அதன் விளைவு வேறு விதமாக முடியும் என்று ஆட்சியாளர்களை எச்சரிக்க விரும்புகிறேன்"—என்று வீரவுரையாற்றியுள்ளார்.

பகைவனிடம் போர்க் கருவிகளை ஒப்படைத்து, சரணாகதிக்கு அடையாளமாக வெள்ளைக் கொடியையும் உயர்த்திவிட்டு, பிறகு போருக்கு முழக்கம் செய்யும் தன்மை போல, அவர்கள் பெற்றெடுத்த சேவலையும். தலைவரையும் காமராசருக்கு அர்ப்பணித்து விட்டு, இன்று அவதிப்படுகிறார்கள் வன்னிய மக்கள்!

பாவம்! இராமசாமிப் படையாச்சியார் வன்னிய மக்களை ஏமாற்றி விட்டார். அண்ணா அவர்கள் ஆரம்பத்திலேயே திருவெண்ணெய்நல்லூர் பொதுக் கூட்டத்தில் சிந்திய பொன்னுரைதான் இந்த நேரத்திலே நம் காதுகளில் ரீங்காரம் செய்கிறது. வன்னிய குல வீரர்களுக்கு 'வரும் பொருள் உரைத்த' அண்ணாவின் பேச்சை இதோ காணிக்கையாக்குகிறோம்.

"உழைப்பாளர் கட்சியினரின் போக்கால் நாங்கள் ஏமாற்றப்பட்டோம்! எங்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றம் கூடப் பெரிதல்ல; ஏனெனில் அரசியல் வாழ்விலே அத்தகைய ஏமாற்றங்கள் பலவற்றை நாங்கள் சந்தித்து விட்டிருக்கிறோம்!

"ஆனால், ஒரு பெரும் சமூகத்திற்கு நேர்ந்த ஏமாற்றம் தான் மிகப் பெரியது; அந்த மக்கள் உண்மையிலேயே ஏமாற்றப்பட்டு விட்டார்கள்.

—பத்து மாதங்களுக்கு முன்பு அண்ணா தந்த அறிவுரையை கடலூரிலே கூடியோர் மீண்டுமொரு முறை படித்துணர வேண்டும்.

ஆமாம்; வன்னிய மக்களை இராமசாமிப் படையாச்சியார் ஏமாற்றி விட்டார்!

இனியும் வன் ... சமுதாயத்தில், பிறந்த ... ஏமாந்தவர்களாக இருக்கக்கூடாது; ஏமாற்றுக்காரர்களுக்கு அதிகமான ... கூடாது!— கோதிப்படைந்து போயிருக்கும் வாலிபர் காட்டிவிட் ... களுக்கு இதைத்தான் வேண்டுகோளாக விடுக்கிறோம் ... நகேபின் குற்றச்

காஞ்சியிலே காங்கிரசின் நிழல்!

குழப்பத்துக்கிடையே பிரஜா சோஷலிஸ்ட்கள் காஞ்சியில் மாநாடு கூட்டுகிறார்கள்!

★★ ஆள் குழப்பம் மட்டுமல்ல; வழக்கம்போல கொள்கைக் குழப்பமும் பிடித்து அவர்களைப் பேயாட்டம் ஆட்டுகிறது' அசோக் மேத்தா அறிவுரையே இதற்குச் சான்று!

காஷ்மீரத்திலே தாங்கள் கடைப்பிடித்து வரும் கொள்கையை இனிமேல் மாற்றிக் கொள்ள வேண்டுமாம்—இப்படிச் சொல்கிறார், அசோக் மேத்தா.

★★ ஏன் மாற்றிக் கொள்ள வேண்டும்?

காரணம் காட்டவில்லை, அவர்!

★★ நிலைமை தெரிந்த நமக்குப் புரிகிறது. அவருடைய பொருள் பொதிந்த போக்கு!

சென்ற ஆண்டிலே காஷ்மீரத்திலே நடந்த நிகழ்ச்சிகள் நம் நினைவுக்கு வருகிறது.

★★ காஷ்மீரத்திலே உள்ள பிரஜா கட்சி இது நாள் வரை அரசாங்கத்தின் எதிர்க் கட்சியாகத்தான் இருந்து வந்தது. பிரதமர் பக்ஷி குலாமை கம்யூனிஸ்ட் சார்புடையவரென்று தாக்குதல் பாணம் தொடுத்தார்கள்.

அது மட்டுமா?

★★ அசோக்மேத்தா சென்ற ஆண்டு காஷ்மீரம் சென்றிருந்தபோது வீதிபோரத்திலே கடுமையாகத் தாக்கப்பட்டார். பட்டப் பகலிலேயே இந்தக் கொடுமை நடந்தது.

★★ அப்போது அசோக் மேத்தா என்ன சொன்னார் தெரியுமா?

கம்யூனிஸ்ட்காரர்கள்தான் இந்த அநாகரிகச் செயலுக்குக் காரணம் எனக் கூப்பாடு போட்டார். பக்ஷியின் அரசாங்கமும் இதற்குத் துணையிருந்ததாக முழக்கமிட்டார்.

★★ அப்படியெல்லாம் அன்று எதிர்ப்புக் குரல் தந்தவர் இன்று கொள்கையைத் திருப்பி ஆதரவுக்கரம் கொடுக்க முன் வருவானேன்?

காரணம் இருக்கிறது.

★★ இப்போது அசோக் மேத்தா பார்லிமெண்டின் அங்கத்தினர்.

★★ இந்த நிலைமை ஏற்படுவதற்கு அருமைக காங்கிரஸ் நண்பர்கள் பேருதவி புரிந்திருக்கிறார்கள். அவர்கள் ஆதரவு இல்லாவிடில் அசோக்மேத்தா பார்லிமெண்ட் அங்கத்தினராக வெற்றி மாலை சூடியிருக்க முடியாதாம்!

எனவேதான் அந்த உதவிக்கு செய்நன்றி காட்டு முகத்தான் காஷ்மீரத்திலே தன் கட்சிப் படகு செல்லும் திசையையே மாற்றுகிறார்!

★★ நம்மைப் பொறுத்த வரையிலே பிரஜா கட்சி காங்கிரசின் நிழல்—என்பதுதான் முடிவு. அதுவும் உச்சி வெய்யிலில் தோன்றும் நிழல் போல உருவத்தைவிட குறுகிப் போனது!

அதன் உருவமாம் காங்கிரசே அழியும்போது நிழலைப்பற்றி யார் கவலைப் படப் போகிறார்கள்!

★★★ சென்னகத்தின் ஆவடியிலே காங்கிரசார் மாநாடு கூடினார்களே—அன்று 'நிழலும்' இப்போது விந்தியத்திற்கு இப்பால் குடி வந்திருக்கிறது!

★★★ காங்கிரசின் நிழல்தான் பிரஜா கட்சி என்பதற்கு இதைவிட வேறென்ன அத்தாட்சி வேண்டும்?

★

தேன் துளிகள்!

கலைவாணர் என். எஸ். கே. வீட்டிலே அவருடைய மைத்துனர் தோழர் டி. ஏ. துரைராஜன்—தோழியர் பொன்னுரங்கம் திருமணம் 26-6-55 அன்று நடைபெற்றது. இசைவாணர்கள் பலரின் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அறிஞர் அண்ணா, திருக்குறள் முனிசாமி, தருமாம்பாள் அம்மையார் — மணமக்களை வாழ்த்தினர். நாதசுரச் சக்கரவர்த்தி ராஜரத்தினம் அவர்களின் இசை மழையைப் பாராட்டி கலைஞர் டி. கே. சண்முகம் பேசினார்.

"ராஜரத்தினம் பிள்ளைக்கு விருது தந்து இந்திய சர்க்கார் பெருமை பெற்றது; ராஜரத்தினம் நம்மவர் என்று நாம் பெருமை பெறுகிறோம்" என்றார் சண்முகம். 'நம்மவர்' என்ற அந்த இனிமையான சொல் கேட்டு மக்கள் பூரித்தனர்.

இசை நடுவே ராஜரத்தினம் அவர்கள் எழுந்து, "எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களை சிறிது நேரம் பேசி என்னை வாழ்த்த வேண்டுகிறேன்" எனக் குறிப்பிட்டார். "எங்கள் தலைவர்" என்ற அந்த உணர்ச்சி மிகுந்த—வளம் நிறைந்த சொல் கேட்டுப் பேரொலி செய்து பெரு மகிழ்வு பூண்டனர் மணம் காண வந்தவர்கள்!

வாழ்க கணேசன்—நாகரெத்தினம்!

திருச்சி திராவிடப் பண்ணை உரிமையாளர் தோழர் தி வீ. முத்துகிருஷ்ணன் அவர்களின் சகோதரர் தோழர் தி.வி.கணேசன்—தோழியர் நாகரெத்தினம் திருமணம் சென்ற 19-6-55 அன்று திருச்சியில் நடைபெற்றது. [illegible]விற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை [illegible] — முன்னணி வீரர்கள் பலரும் கலந்து கொ[illegible]க்களை வாழ்த்துகிறோம்.

கடல் கடந்தோர் கடிதம்

மலாயா

தமிழ்த்தாய் சிரிக்கிறாள். வெற்றிச் சிரிப்பல்ல; வேதனை கலந்த சிரிப்பு! வடவன் தமிழன் நிலையைப் பார்த்து சிரிக்கிறான்; விலா வெடிக்கசந்தோஷச் சிரிப்பு! ஏன் இந்த அவலநிலை? இதைச் சிந்தித்தானா தமிழன்? இந்த நேரத்தில் வளமிலா பாஷைக்காரனை வடநாட்டான், குப்பைக் காகிதம் முதல், சிறிய தபால் தலை வரை இந்தியை புகுத்திவிட்டான். இத்துடன் விட்டானா? போர்க் கப்பல், ஆகாய விமானம், தரைப் படை யாவுமே இந்தி மயம்

சில மாதங்களுக்கு முன் மலாயாவிற்கு இந்திய போர்க் கப்பல்கள் வந்தன. இக் கப்பல்கள் மலாயாவின் உன்னதப்பட்டினமாகிய பினாங்கிற்கு வந்து தங்கின. அதைப் பார்ப்பதற்கு நானும் போயிருந்தேன். அவைகளில் பெரும் பாலும் வடநாட்டான் ஆதிக்கம் மிளிருகிறது. ஆகா, இந்நாட்டிலுள்ள அவர் இனத்துக்காரர்கள் அவர்களுடன் குலாவிக் கொண்டால், என் போன்றவர்களுக்கு எப்படி இருக்கும்?

மேலும் தரணி புகழ கப்பல் ஓட்டிய தமிழன், கப்பலின் இயந்திரங்களுக்கு 'கிரீஸ்' போடுகிறான். ஆனால் வடவனோ வரும் பெரிய மனிதர்களுடன் கை குலுக்குகிறான். எப்படி சுதந்திரம் இருக்கிறது பார்த்தீர்களா? யாருக்கு சுதந்திரம்? அவனுக்கா? நமக்கா?

எங்களின் தாய் நாடாகிய மலாயாவில் எட்டு லட்சம் இந்தியர்கள் வசிக்கிறோம். இதில் ஆறு லட்சம் பேர் தமிழர்கள். இந்நாட்டில் முக்கிய பாஷைகளில் தமிழும் ஒன்று. ஆனால் இந்திய கப்பலில் வந்தவனோ இந்தியில் முழங்குகிறான். இந்த நிலையில் என் போன்ற தமிழர்கள் என்ன செய்வது? நல்லெண்ணக் குழுக்கள் தான் வருகின்றனவே, அவைகளிலாவது தமிழனைக் காண முடிகிறதா? இல்லை; ஆறு லட்சம் தமிழர் வாழும் மலாயாவிற்கு ஒரு தமிழனாகிலும் ஸ்தானிகர் உண்டா?

இந்த உரிமைக்குரல் தாயகத்திலிருந்து எழும்புகிறது. இதோ, அதையே எதிரொலிக்கிறோம் நாங்கள், கடல் கடந்த பூமியிலே கண்ணீர் சிந்தும் வேளையிலே!

இப்படிக்கு
என். கனகம்
கோடா (மலேயா)
10-6-55

One side of the page is dark

எழுச்சியின் வித்து - எகிப்தின் நஸார்

பி.சி.கணேசன்
பி.எஸ்ஸி;பி.டி.

ஜெனிவா மாநாட்டிற்குப் பிறகு, சீனப் பிரதமர் சௌ-என்-லாய் அகில உலக அரங்கில் அதிக செல்வாக்குப் பெற்றிருப்பது போல பாண்டுங் மாநாட்டிற்குப் பிறகு, க(ர்)னல் நஸாருடைய பெருமை மிகவும் உயர்ந்து விட்டது. பாலையாகவே இருந்திருக்க வேண்டிய எகிப்தில் பசுமையைப் படர விட்ட நைல் நதி போல, எகிப்து நாட்டின் அரசியல் பாலையில், எழில் மிக்க சோலைகளைச் சிருஷ்டித்த நைல்தான் நஸார். ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாகரிகத்தின் தொட்டில் என்று கருதப்பட்ட நாடு எகிப்து நாடு. எத்தியோப்பியர், பாரசீகர், கிரேக்கர், அராபியர், ரோமானியர், துருக்கியர் போன்ற பல்வேறு இனத்தவர்களின் வேட்டைக் காடாக விளங்கி, அவர்களுடைய நாகரிகங்களை யெல்லாம் ஜீரணித்து, புதியதொரு நாகரிகத்தை உருவாக்கிக்கொண்ட நாடு. வாளேந்தி உலகாளப் புறப்பட்ட மாவீரர்கள் சீசரையும், அண்டோனியையும், வேல் விழியாலும் வெறிப் புன்னகையாலும் தன் தாள் கிடக்கச் செய்த பேரழகி கிளியோபாட்ராவின் நாடு அது. வான வீதியில் வலம் வரும் கோள்களின் பாதையை, கணித மூலம் கண்டறிந்து, விஞ்ஞான வரலாற்றில் புது ஏடுகளைச் சேர்த்த வானுராய்ச்சியாளன் டாலமி பிறந்த நாடு. மனிதப் பண்பையே உருவகப் படுத்தியது போல, பெண்ணின் முகமும் மிருகத்தின் உடலும் கொண்ட ஸ்பிங்ஸ் சிலை கம்பீரமாகக் காட்சியளிக்கும் நாடு. மாண்டு போன முன்னோரின் சடலங்கள், அழுகி, மக்கி, மண்ணோடு மண்ணுகி விடாமல், உயிரிருந்த பொழுது உடலிலிருந்த மெருகு குலையாமல், பத்திரப்படுத்தி வைத்திருக்கும் உலக அதிசயங்களில் ஒன்ருன பிரமிடுகளைக் கொண்ட நாடு. இப்படிப்பட்ட புராதனச் செல்வங்களைக் கொண்ட நாடு தான் ஆடம்பரத்தில் கிளியோபாட்ராவின் வாரிசாகவே விளங்கிய பருக் மன்னரின் ஆட்சியில் சீரழிந்து போயிற்று. சிங்காரிகள் சிந்து பாட, சீமான்கள் பாராக்குக் கூற, குடி வகைகளிலும், குதிரைப் பந்தயங்களிலும் குவலயம் ஆளும் முறையைக் கண்டு கொண்டிருந்த பருக் மன்னரின் ஆட்சிக்கு 1952-ம் ஆண்டு, ஜூலை மாதம், 23-ம் நாள் நடந்த ராணுவப் புரட்சி சாவுமணி அடித்தது. புரட்சி நடந்த மூன்று தினங்களிலேயே புவியாண்ட பூமான் பருக், முடி துறந்து, நாடு கடத்தப்பட்டு, அகப்பட்டதை யெல்லாம் சுருட்டிக் கொண்டு, ஆடம்பர வாழ்வு அஸ்தமித்துவிட்டதே என்ற எண்ணம் நெருப்பாகச் சுட, கப்பலேறிக் கிளம்பினுர். அப்பொழுது பருக் மன்னர் வேடிக்கையாகக் குறிப்பிட்டார்: ''நான் முடி துறந்த பிறகு, உலகத்தில் சக்தி வாய்ந்த, மதிக்கத்தக்க மன்னர்கள் ஐவரே இருப்பார்கள். ஒருவர் பிரிட்டிஷ் மன்னர். மற்ற நால்வரையும் எந்தச் சீட்டுக் கட்டிலும் நீங்கள் பார்க்கலாம்.''

பருக் மன்னரின் வெளியேற்றத்தோடு, எகிப்து நாடு ஒரு புது வாழ்வைத் துவங்கியது. ராணுவப்புரட்சியின் தளபதிகளாக விளங்கியவர்கள் க(ர்)னல் நஸாரும், ஜெனரல் நகீபும் ஆவார்கள். நகிப் அந்தப் புரட்சியின் உடலாகவும், நஸார் அதை இயக்கிய உயிராகவும் கருதப்படுகின்றனர்.

புரட்சி நடந்த சில மாதங்களிலேயே எகிப்து ஒரு குடியரசு என்று பிரகடனப் படுத்தப்பட்டது. புரட்சிக்கு முன், பிரிட்டிஷ் ராணுவம், பிற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட தேசியக் கட்சியான வாப்டுக் கட்சி, பருக் மன்னர்—ஆகிய மூன்று சக்திகள் தான் எகிப்தை ஆட்டிப் படைத்தன. புரட்சிக்குப் பிறகு எகிப்தின் அரசியல் கட்சிகள் எல்லாம் கலைக்கப்பட்டு விட்டன. புரட்சியின் மூலவரான நஸார் எகிப்து மக்களுக்கு வழங்கிய நிலச் சீர்திருத்தம், லஞ்ச ஊழல்களினுல் நாட்டை நாசப் படுத்தியோருக்கு வழங்கிய கடுந் தண்டனைகள் மூலம், மக்களின் இதயங்களில் அழியாத இடம் பெற்று விட்டார்.

நஸாருக்கு இப்பொழுது வயது முப்பத்தேழு. அகில உலக அரங்கில் பிரபலம் பெற்றுள்ள இளந் தலைவர்களில் அவரும் ஒருவர். ஆறடி இரண்டங்குல உயரமும், அமைதியான கூரிய கண்களும், கருப்பு நிறமும், அலை போலச் சுருண்ட தலை மயிரும், அதன் மத்தியில் ஆங்காங்கே காணப் படும் ஓரிரு நரையும், நீண்ட பெரிய நாசியும் கொண்ட நஸார் ஒரு சிறந்த அரசியல் மேதையாகவே மதிக்கப்படுகிருர். இஸ்லாமிய ஒழுக்க நெறியில் முறையோடு நிற்பவர். தன்னலமற்ற தன்மையில் எகிப்து நாட்டுக்கு இடையருது உழைக்கிருர் என்பதில் எவருக்கும் அபிப்பிராய பேதமே கிடையாது. இவ்வளவு சீரிய, தலைமைக்குரிய பண்புகள் நிறைந்த நஸார் ஒரு எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய தந்தை தபாலாபீசில் குமாஸ்தா வேலை பார்த்து வந்தார். தாய் ஒரு வியாபாரியின் மகள். நஸார் மாணவராயிருக்கும் பொழுதே, மாணவர் கலகங்களில் ஈடுபட்டு, (எகிப்து நாட்டில் நடக்கும் கலவரங்களில் மாணவர்கள் பெரும் பங்கு எடுத்துக் கொள்ளுவது சரித்திரப் பிரசித்தம்) பல முறை சிறை சென்றிருக்கிருர். கொஞ்ச காலம் சட்டக் கல்வி பயின்றபின், இராணுவத்தில் சேர்ந்தார். சூடானில் சிறிது காலம் இராணுவ சேவை செய்த பின், இஸ்ரேல் நாட்டில் நடந்த போரில் பங்கெடுத்துக் கொண்டார். அந்தக் காலத்தில் இராணுவத்திற்கு ஆயுதங்கள் 'சப்ளை' செய்த ஏஜண்டுகள் ஏராளமான பணத்தை ஏப்பமிட்டு, மிகவும் மட்டமான ஆயுதங்களையே அனுப்பி வைத்தனர். அப்பொழுது நஸார் பெற்ற அனுபவம்தான் உண்மையான எகிப்தைஅவர் உணரும்படியாகச் செய்தது. இராணுவ அதிகாரிகளிடத்தே அப்பொழுது ஏற்பட்ட அதிருப்தியைப் பயன் படுத்தி, அவர்களில் சுமார் நானூறு பேர்களைக் கொண்ட ஒரு இரகசிய, புரட்சி விடுதலைப் படையை நிறுவினுர். அப்பொழுது அந்தப் புரட்சிப் படையில் ஜெனரல் நகீப் இடம் பெறவில்லை. முதியவராகவும், பொது ஜன செல்வாக்குப் பெற்றவராகவும் இருந்த காரணத்தினுல், இளைஞர்களை மட்டுமே கொண்டிருந்த புரட்சிப் படையில், அவரையும் சேர்த்துக் கொள்வது புரட்சியின் வெற்றிக்கு அவசிய மெனக்கருதிய நஸார் அவரையும் சேர்த்துக் கொண்டார்.

1952-ம் ஆண்டு, ஜூலை 23-ம் தேதி நஸாரின் கனவு நிறைவேறியது. பாராளும் பணி மறந்து, குடும்பச் செலவுக்காகவே அரசாங்கக் கஜானுவைக் காலி செய்த பருக் மன்னர், முடி துறந்தார். நாட்டிலே நல்லாட்சி மலர்ந்தது! பருக் மன்னரின் 'பரிவாரங்கள்' பகலவன் கண்ட பனி யென மறைந்தன. அரசியல் பொம்மலாட்டம் சில நாள் நடந்த பின், மக்களின் மன மாளிகையில் கொலு வீற்றிருந்த ஜெனரல் நகீப் குடியரசுத் தலைவரானுர். நகீப்—நஸார் கூட்டு, சுடுகாடான எகிப்து நாட்டிற்கு சுபிட்சம் கொடுத்திருக்கும் மகத்தான சக்தி என மக்கள் மனம் மகிழ்ந்தனர். நகீபின் அனுபவமும், நஸாரின் செயலாற்றும் திறனும் எகிப்தில் புதியதோர் மறுமலர்ச்சியை உண்டாக்கும் என்று உலகமே எதிர் பார்த்தது. ஆனுல் நடந்ததோ வேறு! தேர்தல் மூலமாக மக்களாட்சியை நிறுவுகின்ற அளவுக்கு எகிப்தியர் இன்னும் அரசியல் பக்குவம் அடையவில்லை என்பது நஸாரின் வாதம். மக்களாட்சி நிறுவப்படாவிட்டால், இராணுவ ஆட்சி சர்வாதிகாரமாக மாறி விடும் என்பது நகீபின் பயம். சூயஸ் கால்வாய் சம்பந்தமாக பிரிட்டனோடு எகிப்து செய்து கொண்ட ஒப்பந்தத்தில், பிரிட்டனுக்குத் தேவைக்கு அதிகமான சலுகைகளை நஸார் காட்டிவிட்டார் என்பது நகீபின் குற்றச்சாட்டு. உள்நாட்டில் அரசாங்க இயந்திரத்தைச் செப்பனிட்டு, ஆக்க வேலைகளில் ஈடுபட, வெளி நாட்டு விவகாரங்களில் அமைதி தேவை என்பது நஸாரின் நம்பிக்கை. இந்தக் கொள்கை வேறுபாடு நகீபையும், நஸாரையும் அரசியல் எதிரிகளாக்கியது. இருவரில், யாருடைய போக்கு சரியென்பதைக் காலம்தான் கணிக்க முடியும்.

1954-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் நஸாரைச் சுட்டுக் கொல்ல 'முஸ்லிம் சகோதரக் கழகத்'தார் செய்த சதியில் எப்படியோ நகீபின் பெயரும் இணைக்கப்பட்டுவிட்டது. அந்தக் கழகத்தாரே நகீபைத் தங்களுடைய தலைவர் என்று கோர்ட்டில் சாட்சியம் கொடுத்தனர். அப்பொழுது கைது செய்யப்பட்ட நகீப், இன்னும் நடமாடும் உரிமையின்றி, காவலில் வைக்கப்பட்டிருக்கிருர். அவரை விசாரணை செய்து தண்டிக்கும் அளவுக்கு நஸார் அரசியல் விவேகமற்றவரல்ல. நகீபுக்கு அளிக்கப்படும் தண்டனை, எகிப்தின் அரசியல் அஸ்திவாரத்தையே அசைத்துவிடும் என்பது அவருக்குத் தெரியும். நகிபை அரசாங்கத்திலிருந்து விரட்டுவதற்காக நஸாரே தனக்கு எதிரான ஒரு நடிப்புச் சதியை 'முஸ்லிம் சகோதரக் கழக'த்தாரைக் கொண்டு தூண்டிவிட்டு, அதில் நகீபின் பெயரையும் இணைத்துவிட்டார் என்பது சில அரசியல் நிபுணர்களின் கருத்து.

உலக அரசியலில் நஸார் ஒரு அங்கீகரிக்கப்பட்ட சக்தி. அவருடைய ஆட்சியில் எகிப்து நாடு எவ்வளவோ நன்மைகளைப் பெற்றிருக்கிறது. கி. மு. 535-லிருந்து கி. பி. 1936 வரை அந்நியரின் சுரண்டல் பூமியாக இருந்த நாட்டை, இன்று சுக வாழ்வுப் பாதையில் துணிவோடு அழைத்துச் செல்லுகிருர். 3 86,198 சதுர மைல் பரப்பளவு கொண்ட எகிப்து நாட்டில், 96·5 சத விகிதம் வெறும் பாலைவனம். 60 லட்சம் ஏக்கர் நிலமே சாகுபடியிலுள்''

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

''முடியாது பாட்டி; என் புருஷனோடெ பெயரின் முதல் எழுத்தைக்கூட நான் சொலல மாட்டேன்...''

29.
சந்திப்பு!

பூதம் தன்னை அப்படியே விழுங்கி ஏப்பம் விடப்போகிறது என்று கற்பனை செய்து கொண்ட, துக்காராம் "என்னை விட்டு விடு!" என்று கத்தினான்.

"உன்னை மட்டுமல்ல; இதோ உன் காதலி பரிமளாவையும் பிடித்து வைத்திருக்கிறேன். இப்போது உங்கள் இருவரையும் பஸ்பமாக்கி விடப்போகிறேன்" என்று பயமுறுத்தியது அந்தக் குரல்.

"அய்யோ, என் கண்மணி பரிமளா! நீயும் அகப்பட்டுக் கொண்டாயா? பூதமே! உனக்குப் புண்யமுண்டு. என் காதலியை விட்டு விடு. நாங்கள் இருவரும் எங்கேயாவது ஓடி விடுகிறோம். இனிமேல் இந்த இடத்திற்கு வரவே மாட்டோம்"—இப்படிக் கெஞ்சினான் துக்காராம்.

"உங்களிருவரையும் விட்டு விடுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை" என்ற முரட்டுக் குரல் பிறந்தது.

"என்ன நிபந்தனையானாலும் சரி—கேட்கிறேன். உம், என்ன நிபந்தனை விதிக்கப் போகிறாய் என்று எனக்குப் புரியும். நாங்களிருவரும் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்—இப்படியெல்லாம் கள்ளக் காதல் செய்யக் கூடாது—என்று நிபந்தனை போடுவாய்—போடு!" என்று துக்காராம் சிறிது தைரியமாகப் பேசினான்.

அவன் 'போடு' என்று சொல்லி முடிப்பதற்குள் அவன் முதுகிலே 'படார்' என்று கம்பால் ஒரு அடி விழுந்தது.

'அய்யோ!' என்று அலறியபடி துக்காராம் துள்ளிக் குதித்தான். தப்பிவிடலாம் என்கின்ற நம்பிக்கை சிறிது உதயமாகி, அதுவும் கருவிலேயே சிதைந்து விட்டதாக உணர்ந்தான்.

"அடே, மனிதப் பூச்சியே! நிபந்தனையைக் கேளடா மடையனே!"

"கேட்கிறேன் சாமி, கேட்கிறேன். சொல்லு!"

"தங்கம் எங்கே கிடைக்கும்? அதை உடனே சொல்!"

"இது என்ன பூகோள பரிக்ஷையா? தங்கம் கோலாரில் கிடைக்கும்"

"யாரை ஏமாற்றுகிறாய்? வீணே சாகாதே! உண்மையைச் சொல்!"

> "ஏழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே...
> காக்கை மூக்கு நிழலிலே...
> கள்வர் புகும் வழியிலே...
> கண்டாலும் 'கம்மாளர்' கண்ணிலே...
> எழுபது கோடி பசும்பொன்..."

"அய்யய்யோ! உண்மையா கோலாருதான்!"

"என்ன?"

துக்காராமின் முதுகில் மீண்டும் ஒரு பலமான அடி விழுந்தது

"அம்மாடி! இது என்ன கோளாறு! இப்படி வந்து மாட்டிக்கிட்டேனே; அய்யா, பூதமே! என்னை விட்டுடு சாமி! வேணும்னா பரிமளாவை நீயே வச்சுக்க. எனக்கு உயிரைக் கொடுத்தா போதும். ஓடி விடுவேன்"—துக்காராம் கீழே விழுந்து தெண்டனிட்டபடி அழ ஆரம்பித்தான்.

"என்னை ஏய்க்க உன்னால் முடியாது. மரியாதையாகச் சொல்லிவிடு. தங்கம் இந்த இடத்திலே இருக்கிறது - அது எனக்குத் தெரியும் – அது எந்த இடம் என்று எனக்குக் குறிப்பாகக் காட்டிவிடு!"

"தங்கமாவது, இரும்பாவது; எனக்கு ஒண்ணும் தெரியாது"

"பொய்! பொய்!! தங்கம் புதைக்கப்பட்டிருக்கிற இடம், உனக்கு நன்றாகத் தெரியும்—அதைச் சொல்லிவிடு! இல்லாவிட்டால் உன் முதுகுத் தோலை உரித்து செருப்புத் தைத்து விடுவேன்."

"ஓகோகோ! நீ சக்கிலிய பூதமா? சாமீ! சாமீ! உனக்கு செருப்பு வேணும்னா ஆயிரம் செருப்பு நான் வாங்கித் தரேன். வீணா என் தோலை உரிச்சுடாதே!"

"தோலை மட்டும் உரிக்க மாட்டேன்; காலையும் முறித்து விடுவேன். சுளை போல உன் கண்களைப் பிடுங்கி விடுவேன். பனங்காய் போல் தலையைத் திருகி விடுவேன். என்ன சொல்லுகிறாய்? தங்கம் இருக்கிற இடத்தை காட்டுகிறாயா?"

"இது என்னா வீண்வம்பு!—தங்கம்னா என்னா? வளையல் செய்ற பொன்னா? அல்லது வளையல் போட்டுக்கிற பெண்ணா?"

"பொன்! பொன்!! அது இந்த மண்ணிலே ஒளிஞ்சுகிட்டு இருக்கு- அதைத்தான் நீ காட்ட வேண்டுமென்று கட்டளையிடுகிறேன்"

"புரியுது-புரியுது. ஏதோ ஒரு சாக்குச் சொல்லி, என் மேல குற்றம் சாட்டி கொன்று சாப்பிட திட்டம் போட்டுவிட்டாய்! இத பாரு! இப்படியெல்லாம் என்னை வம்புக்கு இழுக்காதே! நான் ஏதோ காதல் மயக்கத்திலே வழி தவறி வந்துட்டேன். எனக்கு விடை கொடு. முடிஞ்சா பரிமளாவையும் கொடு— இல்லேன்னா என்னை மட்டும் விடு!"

"சரி! உனக்கு நேரம் நெருங்கி விட்டது. உன்னை என் வயிற்றுக்குள் போட வேண்டியதுதான்-"

இந்த வார்த்தைகளைக் கேட்டதுதான் தாமதம்; என்ன வந்தாலும் சரியென்று துக்காராம் ஓட ஆரம்பித்தான்.

"எங்கேடா ஓடுகிறாய்?" என்ற கூச்சலுடன் அவன் தோள் பட்டையை ஒரு கை அழுத்தியது அதையும் திமிறிக் கொண்டு அவன் ஓடப் பார்த்தான். தலையில் 'மளார்' என்று ஒரு அடி விழுந்தது. அதையும் தாங்கிக் கொண்டு அவன் ஓடினான். அவனது சட்டையை கெட்டியாகப் பிடித்துக் கொண்டது அந்த முரட்டுக் கை.

துக்காராம், செத்து விட்டது போன்ற உணர்ச்சியோடு அசைவற்று நின்றான். தன் எதிரே நிற்கிறது அந்தப் பூதம் என்ற எண்ணத்தில் கண்களை இறுக்கி மூடிக் கொண்டான். "டேய், துக்காராம்! என்னைத் தெரிகிறதா உனக்கு? பார்! கண்ணைத் திறந்து பார்!" என்ற அந்தக் குரல் அவனை இன்னும் அஞ்சிட வைத்தது. சாவதுதான் சாகிறோம்; பூதத்தின் கையிலே சிக்கியிருக்கும் பரிமளாவை கடைசியாக ஒரு முறை பார்த்து விட்டுச் சாவோமே—என்னும் முடிவுடன் துக்காராம் தன் கண்களை மெதுவாகத் திறந்தான். தன் எதிரே நிற்பது யார் என்ற சந்தேகத்தால் கண்களை சிமிட்டி சிமிட்டி ஊன்றிக் கவனித்தான். அவன் கற்பனை செய்திருந்த பூதமோ—சால் போன்ற வயிறும், குகை போன்ற வாயும், மரம் போன்ற கைகளுமுடைய ஒரு மாமிச பர்வதமாகும்.

ஆனால், இப்போது அவன் எதிரே பார்ப்பதோ நினைத்ததற்கு மாறான உருவம்! நன்றாகப் பார்த்தான். இருட்டிலே தோற்றமளிக்கும் அந்த பயங்கர சொரூபம் பூதமல்ல; வெள்ளியம்பலம்தான் என்ற தீர்மானத்திற்கு வந்து விட்டான் என்பதை அவனது ஆழமான பெருமூச்சு எடுத்துக் காட்டியது. பூதம் என்ற சொல் கேட்டு அடைந்த திகிலைவிட அதிகமான திகில் அடைந்தான், வெள்ளியம்பலம் எனக் கண்ட போது! வெள்ளியம்பலம் தன்னை இப்படி மிரட்டுவானேன்- தங்கம் இருக்கும் இடத்தைக் காட்டு என்று கத்துவானேன்- இவ்வளவு கொடுமையாகத் தன்னை நடத்துவானேன்- என்று யோசித்தான். பரிமளா என்ற பெயரைச் சொல்லி, தன்னை யாரோ ஒரு கொலைகாரன் ஏமாற்றி விட்டான் என்ற உண்மையைப் புரிந்து கொண்ட பிறகுதான், தனை பரிமளா காதலிக்கவில்லையே என்ற பழைய நினைவுகளும் வரத் தலைப்பட்டன. "அப்போதே நினைத்தேன்; தனக்கும் பரிமளாவுக்கும் காதல் வளருவதற்கு இந்த மனி

தர் இப்படி கஷ்டப்படுவானேன் என்று! இப்போதல்லவா புரிகிறது அது! அய்யோ, தெளிவு பிறக்கிற நேரம், உயிர் போகிற நேரமாயிருக்கிறதே!'' -இதையெண்ணி மனதுக்குள்ளேயே புலம்பித் துடித்தான், அந்தப் பரிதாபத்திற்குரிய வாலிபன். அவனுடைய இரங்கத்தக்க நிலையை பரிமளாவே நேரில் பார்த்திருந்தால்கூட வருத்தப்பட்டிருப்பாள்; ஏன் பாவம் அநாவசியமாக அவனை காட்டிக் கொடுத்தோமென்று!

"ஐயா! என்னய்யா இதெல்லாம்; எனக்கு ஒண்ணுமே விளங்கலியே! ''—கெஞ்சும் தோரணையில் கேட்டான், வெள்ளியம்பலத்தைப்பார்த்து!

"நான் பூதமென்றேனே, அது உண்மைதான்! இங்கேயிருக்கும் புதையலைக் காக்கும் பூதம் நானேதான்''

"அய்யய்யோ! இது என்னு மறுபடியும் அதிர் வேட்டு போடுறே சாமி! ராத்திரியிலேபூதம்; பகலிலே மனுஷனு?''

"கேளப்பா! பைத்தியக்காரனைப் போல் நடித்து என்னை இளிச்சவாயனக்க முடியாது உன்னாலே! உயிர்மேல் உனக்கு ஆசையிருந்தா ஒழுங்கா உண்மையைக் கக்கி விடு! ''

"உயிரே காலியாக இருக்கும் போது, எப்படி அய்யா கக்குவது? என்னமோ எனக்கு உண்மையெல்லாம் அஜீர்ணமாகிக் கிடக்கிற மாதிரி பேசுறீங்களே! ''

"டேய், பேச்சாளி! கதையெல்லாம் அளக்காதே! தங்கம் புதைக்கப்பட்டிருக்கிற இடத்தை மறைக்காம சொல்லிவிடு!''

"அட கர்மமே; தங்கமாவது! மண்ணாங் கட்டியாவது! எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே! அட கடவுளே! இது என்னப்பா சோதனை— என்னப்பா வேதனை!''

"இந்தபாரு— பயப்படாதே! நயமாவே கேட்கிறேன், சொல்லு! நம்ப ரெண்டு பேருமே கூட்டா சேர்ந்து புதையலை எடுப்போம்; யாருக்கும் தெரியாம அதை பாதுகாத்து பணக்காரனுவோம்! தம்பீ, துக்காராம்; உண்மை உன்னிடமிருக்கிறது; உழைப்பு என்னிடமிருக்கிறது! உண்மையையும், உழைப்பையும் ஒன்றாய்ப் பிசைந்து ஒற்றுமையாக காரியம் செய்தால், இந்த உலகத்திலேயே இரண்டே பணக்காரர்கள் தான் இருப்பார்கள். ஒன்று நீ! அடுத்தது நான்! என்ன சொல்லுகிறாய்?''

"அய்யா—நான் உண்மையைச் சொல்லட்டுமா?''

"சொல்லு தம்பீ சொல்லு! நல்ல பிள்ளையாண்டானல்லவா நீ-சொல்லுப்பா சொல்லு!''

"உண்மையாவே ஒரு உண்மையும் எனக்குத் தெரியாது பராபரமே!''

"பார்த்தாயா வாலாட்டுகிறாய்! ஏய் திமிர்பிடித்தவனே-கையிலே என்ன இருக்கிறது பார்!''

வெள்ளியம்பலம் ஒரு பானை சீவும் அரிவாளை எடுத்து உயர்த்திக் காட்டினார். அதைக் கண்ட துக்காராம் விழி பிதுங்கும் அளவுக்கு பயந்து போய் நின்றான்.

"புதையல் ரகசியம் உன்னிடம்தான் இருக்கிறது. நீ சொல்லா விட்டால் இப்போதே உன் தலையைத் துண்டாடுவேன். ம், சீக்கிரம் சொல்லு!''

துக்காராம், இனித்தான் மீள முடியாது என்பதை திண்ணமாக உணர்ந்து கொண்டான். தந்திரத்தை தந்திரத்தால் வெல்லலாம் என்ற ஒரு அணுவளவு யோசனை அவன் மூளையில் உதித்தது. அதையும் செய்து பார்த்து விடுவோம் என்ற முடிவோடு, துக்காராம் நடிக்க ஆரம்பித்தான்.

'ஐயாவே! கோபிக்காதீர்கள். உயிர் போய் விடுமென்ற பிறகு உண்மையைச் சொல்லாமல் இருப்பேனு? இதோ சொல்லி விடுகிறேன்-புதையல் ரகசியம் என்னிடந்தான் இருக்கிறது''

"சொல்லு' சொல்லு! புத்தியுள்ள பயலே! இப்போதே சொல்லு!''

"அதைச் சொல்ல முடியாது!''

"ஆ!''

"கொடுக்க வேண்டாம்!''

"அப்படின்னு?''

"ஆமாம்; அந்த ரகசியம் ஒரு சாமியாரிடத்திலே இருக்கின்றது. எனக்கும் அந்த சாமியாருக்குந்தான் அந்த ரகசியம் தெரியும்.''

"ஏய்- ஏய்-பொய் சொல்லுகிறாய்? "தங்கம் இந்த மாமரத்தடியில்தான் புதைக்கப்பட்டிருக்கிறது'' என்று நீ உன் காதலியிடம் சொன்னதை நான் இந்தக் காதாரக் கேட்டேன்''

துக்காராமுக்கு ஒன்றும் புரியா விட்டாலும் சமாளித்துக் கொண்டான். யாரோ பேசியதை வெள்ளியம்பலம் கேட்டு விட்டு, எப்படியோ தவருகத் தன்னை இழுத்து வந்து உயிரை வாங்குகிறார் என்றும், அந்த இடத்திலேயிருக்கும் புதையலுக்காகத்தான் அவர் இப்படிப் படாத பாடு படுகிறார் என்றும், விளங்கிக் கொண்ட அவனுக்கு அவரை ஏமாற்றுவது எளிதாகவே தோன்றியது.

"புதையல் இங்கே யிருப்பது உண்மைதான் — மாமரத்தடியென்றதும் சரிதான்-ஆனால் ஒன்று; அந்தப் புதையல் வெளியே கிளம்ப வேண்டுமானல், அதற்கு ஒரு தகடு வைத்து மந்திரம் ஜெபிக்க வேண்டும். அந்த மந்திரத் தகடு இல்லாமல் புதையல் இருக்குமிடத்தைத் தோண்டினுல்; அவ்வளவுதான் — ஆள்பாடு ஆபத்து''—என்பதாக துக்காராம் அளந்து கொட்டினான்.

"அந்த மந்திரத் தகடு எங்கேயிருக்கு தம்பீ?''

"அது அந்தச் சாமியாரிடம் இருக்கிறது!''

"அந்தச் சாமியார் எங்கேயிருக்கிறார்?''

"அதைச் சொன்னல் மந்திரம் பலிக்காது. என்னேடு வாங்க; அவரை உங்களுக்கு நேராவே காட்டுகிறேன''

"சரி, இப்போ நீ போவோமா? உடனே அவரிடம் அந்தத் தகட்டை வாங்கலாமா?''

"ஓ—பேஷாக வாங்கலாம். இப்போதே போகலாம்; வாருங்கள் போகலாம்''

துக்காராமின் பேச்சைக் கேட்டு வெள்ளியம்பலம் அவனுடன் நடக்க ஆரம்பித்தார். துக்காராம் அந்த இருட்டில் கால் போன பக்க மெல்லாம் போய்க் கொண்டிருந்தான்.

இரவு முழுதும் அவரைத் தன் பின்னல் நடக்க வைத்து, எப்படியாவது இரவை ஓட்டி விட்டால், விடிந்ததும் தப்பித்துக் கொள்ளலாம் என்கிற ஒரே முடிவோடுதான் துக்காராம் இந்தத் தந்திரத்தைக் கையாண்டான்.

இதைப் புரிந்து கொள்ளாத வெள்ளியம்பலமும், புதையலை எடுக்கப் போகிறோம் என்ற பூரிப்போடு, கால் வலியையும் கவனிக்காமல் அவனைப் பின் தொடர்ந்தபடி யிருந்தார். மருங்கப் பள்ளத்திலிருந்து, புதுப்பட்டினம் செல்லுகிற குறுக்குப் பாதையிலே, துக்காராம் நடந்தான்; அவரும் தொடர்ந்தார்; தனக்கு முன்னே ஒரு பலிக்கடா நடக்கிறது என்ற இறுமாப்பான எண்ணத்துடனேயே வெள்ளியம்பலம் அவனைத் தொடர்ந்தார். நடந்து, நடந்து புதுப் பட்டினத்தையும் கடந்து விட்டார்கள். இரவு, சீக்கிரம் தொலையமாட்டேன் என்கிறதே எனும் முணுமுணுப்புடன் துக்காராம் முன்னேக்கி கால் வைத்துக் கொண்டிருந்தான். அவர்கள் எதிரே ஆறு குறுக்கிட்டது. ஆம், புதுப்பட்டினத்திற்கும் ராஜாமடத்திற்கும் இடையிலே உள்ள ஆறுதான் அது. ஆற்றங்கரை யோரமாக வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு எதிரே தன்னந்தனியாக ஒரு உருவம் வருவதைக் கண்டார்கள். அதை நோக்கி அடியெடுத்து வைத்தார்கள். அது ஒரு பெண்ணின் உருவம்!

"பரிமளாவைப் போலிருக்கிறதே'' என்று கூறினன், துக்காராம்!

"சரியாகத் தெரியவில்லை. அவளைப் போலத்தான் இருக்கிறது சாயல்''என்றார் வெள்ளியம்பலம்.

[வளரும்]

மாநில மாநாட்டு நிதி

★ தஞ்சை மாவட்டம் தன் 'கோட்டா' இரண்டாயிரத்தையும் பூர்த்தி செய்துவிட்டது.

★ திருச்சி, இன்னும் முன்னூறுதான் பாக்கி வைத்திருக்கிறது.

★ சென்னையோ இரண்டாயிரம் கோட்டாப் பணம் தந்துவிட்டு, அதிகப்படியாக மூவாயிரம் தருவதாக வாக்களித்து, செயலில் இறங்கியிருக்கிறது.

★ மற்ற மாவட்டங்கள் சில்லறையாகத் தந்திருப்பதை சேர்த்து, இதுவரை ஏழாயிரத்தைத் தாண்டியிருக்கிறது நிதி வசூல்!

★ பிப்ரவரியில் பேரூர் பொதுக் குழுவில் கேட்டது இருபத்தையாயிரம்!

★ மாவட்டங்களுக்கு 'கோட்டா' பிரிக்கப்பட்டது சென்னை பொதுக் குழுவில்—அதாவது ஏப்ரல் 24-ந் தேதியன்று!

★ மே, ஜூன் இரண்டே மாதங்களில்—ஏழாயிரம் கிடைத்திருக்கிறது!

★ சாமான்யர்கள் தந்த தொகை—காலணு அரையணுக்களாக சேர்ந்த தொகை-மிச்சம் பதினெட்டாயிரம் ஜூலைக்குள் சேர்ந்து விடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

★ ★ ★

எங்கே, பார்க்கலாம்; செயல்வீரர்களே! யார் முந்திக் கொள்ளப் போகிறீர்கள்?-அதிகத் தொகை தந்தவர் பட்டியலில் இடம் பெறப் போகும் மாவட்டம் எது? முதற்பரிசைத் தட்டிக் கொள்ள இருக்கும் மாவட்டச் செயலாளர் யார்?

விரைவில்! விரைவில்!!

திரும்பிப்பார்!

"மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு—என்ற தத்துவத்தை உணராத எத்தர்களின் உடல்கள் சத்தெடுக்கப்பட்ட சக்கைகளாக வீசி எறியப் பட்டிருக்கின்றன, சரித்திரத் தெருவின் ஓரங்களிலே..."

—'மணிமகுடம்'

விடுதலை வானம்பாடி!

கவிஞன் வெறும் சொல் வலை பின்னும் செம்படவனல்ல: உணர்ச்சி மீன்களையும் அவன் அவ்வப்போது பிடிக்கக் கிளம்பி விடுகிறான்.

இத்தாலியிலே சுதந்திரப் போர் வெகு தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. மாஜினி-கரிபால்டி-கவூர் ஆகிய மூன்று நட்சத்திரங்கள் காட்டிய வழியிலே இத்தாலியக் காளைகள் தங்கள் உயிரைத் தத்தம் செய்தனர்.

இந்தப் போராட்டத்தைப் படித்த கவிஞன் **பைரன்** வீறு பெற்றான். விடுதலை முரசு கொட்டும் திசை நோக்கி நடை கட்டினான்.

இத்தாலியப் போரிலே அந்தக் கவிஞன் வாலிப வயதிலேயே உயிர் நீத்தான். கவிஞர்கள் கவிதை எழுதுவதிலுமல்ல-காரியத்திலும் அவர்கள் புலிகள்—என்பதை நிரூபித்தான்.

இங்கிலாந்து தான் பெற்ற ஒப்பற்ற காவியச் சுரங்கத்தை இத்தாலிக்காக தியாகம் செய்தது!

★

'ஏக இந்திய' ஏகாதிபத்தியம்!

ஏகாதிபத்ய வெறி பிடித்த சாம்ராஜ்யங்கள் என்றுமே நிலைத்ததில்லை. ஸ்பெயினை ஐந்தாவது சார்லஸ் ஆண்ட காலத்தில் "அவனுடைய சாம்ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பதில்லை"—என்று சொன்னார்கள்.

அதே முறையைப் பின்பற்றி வெள்ளை ஏகாதிபத்யமும் பெருமை அடித்துக் கொண்டது.

இப்போது அவைகளின் நிலைமை என்ன?

சூரியன் மட்டுமல்ல; அந்த சாம்ராஜ்யங்களே அஸ்தமனமாகி விட்டன.

இதே ஏகாதிபத்ய பாணியைச் சேர்ந்ததுதான் 'சோஷலிசபாணி' பேசுவோரின் 'ஏக இந்திய' கோஷம்!

★

நெறியும் வெறியும்!

ஏகாதிபத்ய வெறியர்களுக்கு எப்போதுமே ஆசியா மீது அலாதியான பிரியம்! நெப்போலியனும் இதற்கு விதி விலக்கல்ல. இருபத்தியேழு வயதிலேயே அவன் இப்படிச் சொல்லியிருக்கிறான்:

'கிழக்கில் தான் பெரிய மாறுதல்கள் நிகழ்ந்திருக்கின்றன; கிழக்கில்தான் அறுபது கோடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆசியாவை ஒரு குன்றுக்கு ஒப்பிட்டால் ஐரோப்பாவை ஒரு கறையான் புற்றுக்குத்தான் சமமாகச் சொல்ல வேண்டும்'

அவன் தளபதியானதும் எகிப்தின் மீது படையெடுத்துச் சென்றான். நவீன முறையில் பயிற்சி பெற்ற அவன் பட்டாளம் பத்தாம் பசலி முறையில் பயிற்சி பெற்ற எகிப்திய இராணுவத்தைச் சந்தித்தது.

பாவம்; எகிப்தியர்கள் என்ன செய்வார்கள்! அவர்கள் சேனை பிரெஞ்சு வீரர்களைப் பார்த்ததும், பளபளப்பான பட்டாடையுடன் ஒரு குதிரை வீரனை அனுப்பி வைத்து, நெப்போலியனை துவந்த யுத்தத்துக்கு அழைத்ததாம்!

யுத்தவெறி பிடித்த பிரெஞ்சு வீரர்களுக்கு பழைய கால யுத்த நெறி தெரியுமா? பாவம்—அந்த வீரனை அந்த இடத்திலேயே சுட்டுப் பொசுக்கி விட்டார்களாம்!

★

தற்குறி அரசன்!

அக்பர் அகிலமெல்லாம் புகழ் பெற்ற சக்ரவர்த்தி! 'தீன்—இலாஹி' என்னும் புதிய மதமொன்றையே உண்டாக்கிய தத்துவ ஞானி.

ஆனால் அவனுக்கு எழுதவோ, படிக்கவோ தெரியாது! அவன் தந்தை ஹுமாயூன் எவ்வளவோ முயன்றும் எழுத்தாணி பிடிக்க மறுத்து விட்டான் அக்பர்!

ஆனால் பிறரைப் படிக்கச் சொல்லிவிட்டு கூர்மையாகக் கேட்டுக் கொண்டிருப்பானாம். படித்து முடித்ததும் அதை அப்படியே ஒப்புவித்து விடும் அலாதியான ஞாபக சக்தி உண்டாம் அவனுக்கு!

★

எழுச்சியின் வித்து...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

எது. சுமார் இரண்டுகோடி மக்களையும், வேகமான மக்களுற்பத்தியையும், ஆனால் குறைவான வசதிகளையும் கொண்ட எகிப்து நாட்டை ஆளுவது நஸாருக்கு ஒரு பெரிய பிரச்சினையாகவே இருந்து வருகிறது. நைல் நதிப் பாசனமும், பருத்தி விளைச்சலும் இல்லாவிட்டால் எகிப்து வாழ முடியாது. நாணய மாற்று விவகாரங்களில் வெளி நாட்டுடன் வர்த்தகத் தொடர்பு கொள்ள, எகிப்து பருத்தி ஏற்றுமதியையே நம்பியிருக்கவேண்டியிருக்கிறது. ஆகவே நாட்டின் பொருளாதார நிலையைச் சீர்படுத்த, பெட்ரோலியம் கிடைக்கும் இடங்களைத் துருவி ஆராய்ந்து எண்ணெய் உற்பத்தியைப் பெருக்குவதில், நஸார் முழு மூச்சோடு ஈடுபட்டு வருகிறார். அஸ்வானுக்கு அருகில் கட்டப்படும் பெரிய அணைக்கட்டிலிருந்து, 60 முதல் 80 லட்சம் கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படலாமென்று தெரிகிறது.

எகிப்தில் 75 சத விகிதம் மக்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. நஸாரின் சர்க்கார் கல்விக்காக இப்பொழுது ஏராளமான பணத்தைச் செலவிட ஆரம்பித்திருக்கின்றனர். கெய்ரோவில்—எகிப்தின் தலைநகரம் — உள்ள இரண்டு பல்கலைக் கழகங்களில் மட்டும் சுமார் 27,000 மாணவர்கள் படிக்கின்றனர். எகிப்தின் பெரும்பான்மையான சாகுபடி நிலம் பணம் படைத்த ஒரு சில பாஷாக்களிடமே இருந்தன.

ஆகவே நஸார், யாரும் 200 ஏக்கருக்குமேல் வைத்திருக்கக் கூடாதென்று சட்டம் செய்துவிட்டார். 'சோஷலிச மாடல்' என்று தத்துவம் பேசாமல், 'நில சீர்திருத்தம்' என்று தேர்தல் வாண வேடிக்கைகள் விடாமல், நஸார் உண்மையான சீர்திருத்தங்கள் மூலம் ஏழைகளின் உள்ளத்தைக் கவர்ந்து 'ஏழை பங்காளன்' என்ற பெயரையும் பெற்றுவிட்டார்.

வெளிநாட்டு நிருபர்களிடம் நஸார் அளந்தே பேசுகிறார். இக்கட்டான கேள்விகளைச் சிரித்து சமாளிக்கிறார். அவர் நீண்ட சொற்பொழிவுகள் ஆற்றுவதில்லை. ஆங்கிலம் சுமாராகவே பேசத் தெரிந்தவர். அவருக்கு அரசியல் ஆலோசகராகத் துணை புரிபவர், அவருடைய நண்பரான அன்வார்-எல்-சடேட் என்பவர். அவர்தான் அதிகாரப் பூர்வமான அரசாங்கப் பத்திரிகையின் ஆசிரியர். அரசாங்கத்தின் தணிக்கை பெற்ற செய்திகளையே பிரசுரிக்க எகிப்து பத்திரிகைகளுக்கு உரிமையுண்டு.

எகிப்தில் முழு ஜனநாயகம் மலரவில்லை என்பது உண்மையானாலும், 1936-ல் பிரிட்டிஷார் அந்நாட்டிற்கு சுயாட்சி வழங்கிய பின், ஏற்பட்டிருக்கும் பலம் பொருந்திய நாணயமான சர்க்கார் நஸாரின் சர்க்கார்தான். நஸாருக்கு உள்நாட்டில் விரோதிகள் இல்லாமலில்லை. சர்வ அதிகாரத்தோடு விளங்கும் கமால் அப்துல் நஸார் தன்னுடைய பழைய சிறிய இல்லத்திலேயே இன்னும் வசித்து வருகிறார். 'எதிரிகள் அவரை வாழ விட்டால்' (பிரபல அரசியல் கட்டுரையாளர் அலக்ஸ்பாஸ் இப்படி சந்தேகப்படுகிறார்) நிச்சயம் நஸார், லெனினுடைய ரஷ்யா, கமாலின் துருக்கி, மா-சே-துங்கின் சீனா என்பது போல, நஸாரின் எகிப்து என்று அழைக்கப்படுகின்ற நிலைக்கு சரித்திரத்தில் இடம்பெற்று விடுவார் என்பது திண்ணம்.

★

மீர்சாகிப்பேட்டை, அழகிரி நாடக மன்றத்தாரின்

"அந்தான்"

(சமூக நாடகம்)

9-7-55, சனிக்கிழமை, மாலை 6-மணிக்கு,
எழும்பூர் மியூசியம் தியேட்டரில் நடைபெறும்.

கதை வசனம் : எஸ். எஸ். தென்னரசு
பயிற்சி : ஏ. தன்ராஜ்

பாடல்கள் : கவிஞர். கண்ணதாசன், பூவை. செங்குட்டுவன், இரா. சாரங்கராசன்
இசையமைப்பு : இரா. சாரங்கராசன்
பின்னணி இசைக் குழு: ஆர். கே. சேகர் குழுவினர்

நடிகர்கள் :
திருநாவு, டி. ஏ. வெங்கடாசலம், மு. புரட்சிமணி, சாரங்கன், வி. கன்னியப்பன், பெருமாள், சி. ஆர். பழனி, டி. ஞானசேகரன், இ. மணி, உமார், வி. ராமச்சந்திரன், லோகநாதன், எத்திராசன், இராசாபாதர்.

நடிகைகள் :
மனோகரி, வி. சரசுவதி, ஆர். ஆண்டாள், ஜெயலட்சுமி.

கட்டணம் : ரு. 2, 1, அணா 8.

வி. கன்னியப்பன்
அமைப்பாளர்.

'வாழமுடியாதவர்கள்'

—[இரண்டாம் பாகம்]—

மழலை உரை கேட்டு மகிழ்ந்தவன்! "கண்ணே! சனிச் சாறே!"—என்று புகழ்ந்தவன்! பிறந்த போது பேருவகையிலே மூழ்கியவன்!— அந்தப் பாவி தான் அவளைக் கட்டிலறையிலே சந்தித்தான். பொல்லாத காம வெறியால் கட்டுண்டு. நிகரில்லாத புத்திர பாசத்தை மறந்து. வெல்லச் சொல் உதிர்த்த தன் மகளை வெள்ளாட்டியாக்கிக் கொண்டான்! வேதனை தரும் செய்தி! கேட்டவுடனே நெஞ்சு வெடிக்கும் நிகழ்ச்சி! மனிதாபிமானம் வெட்கத்தால் சுருங்கிப் போகும் கோணல் நடத்தை!

நம்பமுடியவில்லை; ஆனாலும் நடந்திருக்கிறது!

பெற்று வளர்த்த மகளை போகக் களத்திலே சந்தித்தவன் இருதயமில்லாத மரக்கட்டை! உணர்ச்சி வெறிக்கு இலக்கான உதவாக்கரை! நாடி நரம்புகளுக்குப் பலியான காட்டுமிராண்டி! அல்ல; அல்ல!

தகப்பனைக் கூடிய அந்தத் தையல் காலத்தின் கொடுமையால் தாயாகி விட்டாள்!

அநியாயத்தின் நினைவுச் சின்னம் அடிவயிற்றிலே வளர ஆரம்பித்து விட்டது!

"அக்ரமக்காரர்களே! நீங்கள் செய்த கொடுமைகள் அனைத்தையும், கொட்டு மேளத்துடன் உலகத்துக்கு அறிவித்து விடுகிறேன், பார்! இன்னும் பத்து மாதங்கள் கழித்து 'குவா, குவா' என்று சங்கீத மழை பொழிவேன். நீயோ கல்யாணமாகாதவள்; உன் கூட வசிக்கும் தந்தையோ சிற்றின்ப சாகரம்—உனக்குக் குழந்தை பிறந்தால் ஊரார் என்ன நினைப்பார்கள்? 'கன்னி மேரியாளுக்கு ஏசுநாதர் பிறக்கவில்லையா? அது போல தெய்வாதீனமாக உனக்கும் குழந்தை பிறந்து விட்டது'—என்று

வளரும் குழந்தையை என்ன செய்வதென்று!

நாட்கள் ஓடின. பத்து மாதங்களும் ஒரு முடிவுக்கு வந்தது. நீலவிழி உருட்டி, நிச்சலச் சிரிப்பு காட்டும் ஒரு ஆண் குழந்தை அவர்கள் வீட்டுக்குக் குடி வந்தான்.

முன்பே செய்திருந்த ஏற்பாட்டின்படி குழலையும், யாழையும் வெல்லும் அந்த மழலைச் செல்வம் ஒரு அனாதை விடுதியிலே சேர்க்கப்பட்டது.

தகப்பனுக்கு மனைவியாகி— ஒரு குழந்தைக்கும் தாயான அந்தப் பொல்லாதவள் பெயர் தான் அலிஸ் பர்ராவே!

தந்தைக்கு ஒரு மகன்—அதாவது தனக்கு ஒரு தம்பி— பிறந்தது கண்டு அவள் ஆயாசப் படவில்லை. காமவெறியாட்டம் அவள் உள்ளத்திலே ஏற்

வாலிபன் ஒருவன் நார்போக் கிராமத்துக்கு வந்தான்.

நாடோடியாம் அவன்! வயிறு வளர்த்து, வாழ்வு நடத்த வேலை வேண்டுமாம், அவனுக்கு! ஒவ்வொரு வீடாக அவன் ஏறி, இறங்கினான். அவன் நிலை கண்டு 'இச்' என்று அனுதாப ஒலி காட்டியோர், வேலையென்று கேட்டபோது உதட்டைப் பிதுக்கினர்.

அவள் மட்டும் அவனுக்குத் தன் கிராமத்திலேயே வேலை தந்து உதவினாள். அது மட்டுமா? அந்தக் கட்டிளங்காளைக்கும், உலகத்தின் கண்களுக்கு இன்னும் கன்னியாகவே வாழும் அலிசுக்கும் காதல் அரும்பு கட்டியது. பின், சம்பிரதாயப்படி திருமணமும் செவ்வனே நடந்தேறியது!

இருபது ஆண்டுகள் அந்தத் தம்பதிகள் ஜோடிப் புறாக்களாக வாழ்ந்தார்கள்.

ஒரு நாள் — அலிசின் உள்ளத்தை அக்கினிக்குண்டத்திலே

நம்பமுடியவில்லை; ஆனாலும் நடந்திருக்கிறது!

காட்டுமிராண்டிகள் கூட இன்று நாகரிகத்தின் தூதுவர்களாய் மாறி விட்டார்கள். நாடோடிகளாய்த் திரிந்தவர்கள் கூட நானிலம் போற்றுகிற அளவுக்கு குடும்ப விளக்கைத் தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இவனோ நாகரிகம் கொஞ்சும் நாட்டிலே வாழ்ந்திருக்கிறான். ஆமாம்; இங்கிலாந்திலேதான் இந்த கோரமான கதை நடந்திருக்கிறது.

"என்னப்பா உளறுகிறாய்? 'வாழ முடியாதவர்கள்' கதையின் மறுபதிப்பைப் படித்து விட்டு கிறுக்கித் தள்ளுகிறாயா? அல்லது மாப்பசான் கதைகளை இப்போதுதான் படித்தாயா?" என்றுகூட கேட்கத் தோன்றும்.

தேம்ஸ் நதிக்கரையிலே நடந்தது. 'வாழ முடியாதவர்கள்' கதை மட்டுமல்ல—மாப்பசான் சிற்சில சமயங்களிலே எழுதிக் கொட்டிய சரக்கல்ல—

அங்கே 'வாழமுடியாதவர்கள்' கதை பிரமிக்கத்தக்க நிகழ்ச்சிகள் அடங்கிய தொடர் கதையாக நீண்டிருக்கிறது. மாப்பசானால்கூட கற்பனை செய்ய முடியாத அளவுக்கு அந்த காமகாண்டாமிருகங்களின் லீலா விநோதங்கள் நடந்தேறியிருக்கின்றன!

நினைக்கப் போகிறார்கள்! அப்படியெல்லாம் நடக்காது. 'ஈனச் செயலின் அவதாரமே!' என்று கூறியபடியே நல்லோர் அணிவகுப்பு உங்களிருவர் மீதும் படை கொண்டு வரும். காமவெறியால் கருத்திழந்த கபோதிகளே! உங்களை தணலில் புழுவாகத் துடிக்க வைக்கிறேன்! சித்ரவதை செய்கிறேன்!"—இப்படியெல்லாம் தான அந்தக் குழந்தை பேசியிருக்க வேண்டும்!

கோணங்கிச் சேஷ்டையிலே கிருஷ்ண பரமாத்மாவையும் மிஞ்சி விட்ட அந்தக் தகப்பன், தாரமாகி விட்ட தன் மகளுடன் கூடி ஆலோசித்தான், கருவிலே

படுத்திய சமுத்புகளை, ஓடி மறையும் காலம் மறைத்து விட்டது!

நிலவு காட்டி—உணவூட்டி— பின் தொட்டிலிலே அருமைச் செல்வம் தூங்குவதைக் கண்டு துயர் மறக்க வேண்டிய தாய், தன் குழந்தை அனாதை விடுதியிலே நாதியற்று வாழ்கிறது என்பதையே மறந்து விட்டாள்.

★

கனவுபோல ஆண்டுகள் ஓடின.

குயில் கூவும் வசந்தம், அது! பருவத்தின் அழகு பொங்க

தூக்கி எறியும் பொல்லாத நாள்—அவளைச் சோதனை செய்தது!

தன் கணவனின் கழுத்துப் பட்டையிலே, தன்னுடைய தந்தையின் கழுத்திலே இருப்பது போன்ற மருவொன்று காணப்பட்டது. இருபது ஆண்டுகளாக அவள் பார்க்காத அடையாளத்தை அன்றுதான் பார்த்தாள். கிலியும், திகைப்பும் அவளைச் சூழ்ந்து கொண்டன.

கணவனின் பூர்வீகம் பற்றி அவள் விசாரித்தாள். தான் தாய் தந்தையற்றவன்— என்பதைத் தவிர தனக்கொன்றும் தெரியாது என்று அவன் சொல்லி விட்டான்.

அவள் சந்தேகப் புயலில் சிக்கிக் கொண்டாள். அப்பாவுக்கும், தனக்கும் பிறந்த அந்தக் குழந்தையைச் சேர்த்த அனாதை விடுதிக்குச் சென்று விசாரித்தாள்.

ஆமாம்— அவள் நினைத்தது சரியாகி விட்டது. தன் கணவன் வேறு யாருமல்ல; தன் குழந்தைதான்!

அய்யகோ! அவள் நெஞ்சு துடித்தது. தரையில் விழுந்து மீனாகத் தவித்தாள்.

தொடர்ச்சி 10ம் பக்கம்

மன்னருக்குப் பொன்னாடை!

நகைச்சுவை மன்னர், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தும் விழாவினை தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று கேள்வியுற்று களிபேருவகை எய்தினோம். கலைத் துறையிலே மறுமலர்ச்சியை ஏற்படுத்தக் காரணமாயிருந்த கலைவாணரைப் பாராட்டுகிற பெருமையை தென்னிந்திய நடிகர் சங்கம் பெறுகிறது. தென்னகத்து மக்களை சிரிக்க வைத்து சிந்திக்க வைத்த தீரன்— வேடிக்கை காட்டி, விவேகமுரைத்த விகட வேந்தன்— தென்னாட்டு சார்லி — இந்தப் பாராட்டுதலுக்கு மிகவும் பொருத்தமானவர் என்பதோடு, விழாவுக்கான ஆக்கமும் ஊக்கமும் அளிக்க கலைத் துறை நண்பர்கள் அனைவரையும் வேண்டுகிறோம்.

Best copy available

கொள்கை வளருது கோபுரம் போலே!

பொதுக் கூட்டங்கள்

சென்னை

பாண்டியன் விளையாட்டு மன்ற ஆண்டு விழா

-7-55வெள்ளி மாலை 6 மணிக்கு, சென்னை, ஏழுகிணறு, (9-வது வட்டம்)போர்ச்சுகீஸ் சர்ச் தெரு, பாரக்ஸ் மைதானத்தில், தோழர் வி. முனுசாமி தலைமையில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பும், அறிஞர் அண்ணா அவர்களுக்கு பாராட்டுரையும் வழங்கப்படும்.

சென்னை, ஆயிரம் விளக்கு அறிவு வளர்ச்சி மன்ற இரண்டாவது ஆண்டு விழா.

-7-55 ஞாயிறு மாலை 6 மணிக்கு, அறிவு வளர்ச்சி மன்ற இல்லத்தில் (அஜீஸ் முலக் 4-வது தெரு, ஆயிரம் விளக்கு) புலவர் நன்னன் அவர்கள் தலைமையில், தோழர்கள் க. அன்பழகன் எம். ஏ., திருக்குறள் முனுசாமி ஆசியோர் பேசுவர்.

சித்தலவாய்

3-7-55ஞாயிறு மாலை 6-மணிக்கு, சித்தலவாய் தி. மு. கழகத்தின் மூன்ருவது ஆண்டு விழா நடைபெறும். தோழர் தங்க தெய்வ சிகாமணி அவர்கள தலைமையில், நாஞ்சில் தோழர் கி. மனோகரன் அவர்கள் பேசுவார்.

கோவை

3-7-55 ஞாயிறு மாலை 6 மணிக்கு, கோவை சிதம்பரம் பூங்காவில், பொதுச் செயலாளருக்கு வரவேற்பும், மாநில மாநாட்டு நிதியளிப்பும் நடைபெறும். அச்சமயம்தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஈ. வே. கி. சம்பத் ஆகியோர் பேசுவர். நடுப்பகல் 1 மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெற இருக்கும் விருந்தில் கலந்து கொள்ள விரும்புவோர், கோவை நகர உதவிச் செயலாளரிடம் ஒரு ரூபாய் கட்டணம் செலுத்தவேண்டும்.

புதுவையில் வட்டக்குழு

26—6—55 காலை 10 மணிக்கு, புதுவைத் தி. மு. கழகத்தில், தெ. ஆ. மாவட்டச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அவர்கள் தலைமையில் வட்டக் குழு அமைக்கப்பட்டது. வட்டக் குழுவின் செயலாளராகத தோழர் ச. சிவபிரகாசம் அவர்களும், துணைச் செயலாளராகத் தோழர் வாணிதாசன் அவர்களும், பொருளாளராகத் தோழர் பெ. குப்புசாமி அவர்களும் தேர்நதெடுக்கப் பட்டனர். பின்னர் புதுவை அரசியல் தேர்தல் பற்றிக் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப் பட்டதும், மாநில மாநாட்டு நன்கொடை நிதிக்காகப் புதுவை வட்டத்தின் சார்பில் ரூ. 200 தெ. ஆ. மாவட்டச் செயலாளரிடம் அளிக்கப்பட்டது.

தீர்மானம்

"வரும் ஜூலை மாதம் 18 முதல் 23—தேதிவரை நடைபெற இருக்கும் புதுவை மாவட்ட மக்கள் சபை—நகராண்மைக் கழக தேர்தல்களில், புதுவை வட்டத்திலுள்ள தி. மு. கழகங்கள், குறிப்பிட்ட எந்தக் கட்சிக்கும் தம் ஆதரவை அளிப்பதில்லை யென்றும், ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் அவரவர் தொகுதிகளில் நிற்கக் கூடிய அபேட்சகர்களுள், மக்கள் நலனுக்கும், ஏழைப் பாட்டாளி மக்களின உயர்வுக்கும், ஜனநாயகப் பண்புக்கும், உரிமைக்கும் பாடுபடக் கூடிய நல்லெண்ண முடையவர்களுக்கே தத்தம் வாக்கை அளிப்பதென்றும் இக்குழு முடிவு செய்கிறது."

திருச்சி மாவட்ட தி.மு.க. கிளைச் செயலாளர்கட்கு வேண்டுகோள்.

மாநில மாநாட்டுக்கு திருச்சி மாவட்டப் பங்கு ரூபாய் இரண்டாயிரத்துக்கு, 19—6—55-ல் பொதுச் செயலாளரிடம் திருச்சியில் கொடுத்த ரூ. 1600-ம், வேலாயுதம்பாளையம் பொதுக்கூட்டத்தில் அளித்த ரூ. 101-ஆக - ரூ. 1701 போக, மீதி ரூபாயை இன்னும் இரு வாரங்களில் கொடுப்பதாக உறுதி அளித்திருப்பதால், தங்கள் பங்கை அனுப்பாத கிளைக் கழகங்கள் உடனே மாவட்டப் பொருளாளர் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுமென திருச்சி மாவட்டச் செயலாளர் அம்பில் தருமலிங்கம் அறிவிக்கிருர்.

திருச்சி மாவட்ட தி. மு. க. செயற்குழு கூட்டம்.

3—7—55 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் துறையூர் தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும். அனைவரும் தவருது வரவேண்டுகிறேன்.

பொருள்:-
1. மாநில மாநாட்டு நிதி
2. வரவு செலவு
8. வட்டக் குழு அமைப்பு

—அ. பெ. தர்மலிங்கம்,
செயலாளர்.

வாழமுடியாத....

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

தன்னுடைய மகன் — தந்தைககுப் பிறந்த காரணத்தினால் தன்னுடைய தம்பி — தனக்கே கணவனுகி யிருக்கிருன். அது மட்டுமா? அந்த வெட்கக்கேடு வெளியில் தெரியாத வகையிலே அவனுடன் இருபது ஆண்டுகள் இலலறம் நடத்தியிருக்கிருள!

இத்தனை நாட்களும் மரத்துப் போயிருந்த அவள் தாயுள்ளம் அன்று விழித்துக் கொண்டது; மனித உணர்ச்சி கொழுந்து விட்டு எரிந்தது!

அவள் பெண் அல்ல; உணர்ச்சி கெட்ட மிருகம்!

மிருகமும் அந்தக் கணநேரத்தில் மனிதத் தன்மை பெற்றது. அறைதை விநதியிலேயே இருதயம் வெடித்து அவள் மாண்டாள்!

கணவன் வேலை பார்த்த மகன், தன் தாய்க்கு நேர்ந்த கதி கேட்டான். தன் வரலாறு தெரிந்தது. அவன் வெம்பிப் போனுன்! தேம்பி அழுதான்!

மனித வரலாற்றிலே பேகளங்கத்தை ஏற்படுத்தி விட்டது அவன் பிறப்பு! செய்தி கேள்விப் பட்டதும் சில நாட்கள் அவன் சவமாக நடமாடினுன். ஒரு சில வாரங்களிலேயே அவனும் மரித்து விட்டான். சாவதற்கு முன்னர் அலைசின் சமாதிக்கு முன்பாக நார்போக்கிலுள்ள டார்தம் மாதா கோவிலில் இப்படியொரு கல்லை நாட்டி வைத்திருக்கிருன்:

எனக்குத் தாயாக-தமக்கையாக-தாரமாக இருந்த **அலைஸ்** இங்குதான் புதைக்கப் பட்டிருக்கிருள்.

மறைவு:1729-ம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 12-ந் தேதி.
வயது : 76.

—மாறன் பி. ஏ. (ஹானர்ஸ்)

ஐ. நா. செல்வோம்....

★ 1-ம் பக்கத் தொ

லாம் நல்லதொரு உ... தந்து பேசியுள்ளார்!

ஒவ்வொரு நாட்டிலும் மேல் சபைகள் இருக்கின்றன. அது போலவே ஐ நா. வுக்கும மேல சபையொனறு தேவை. அந்த மேல் சபையிலே அந்தந்த நாடுகளின் **பொது மக்கட் பிரதிநிதிகள்** — அரசாங்கப் பிரதிநிதிகள அல்ல! பணிபுரிய வேண்டும்—இதுதான் பம்பாய் பல்கலைக கழகத்தின் தற்போதைய துணைவேந்தரும்—இந்தியாவின் மாஜி நிதி அமைச்சருமான **ஜான மத்தாய்** மொட்டவிழ்த்துப் பரப்பிய நறுமணம்!

நம்முடைய நம்பிக்கை ஆற்றிலே புதுப்புனல் பாய்ச்சிய இந்தக கொளகை இன்று உலகெங்கும் பேசப்பட்டு வருகிறது. விரைவிலே இது செயல்படும நேரம் வரததான் போகிறது.

ஐ நா. விலே இன்று அரசாங்கத்தின் குரல் கேட்கிறது. நாளை மக்களுடைய குரல கேட்கும்!

ஆள்வோர் குரலோடு சோநது ஆளப்படுவோரின் குரலும் ஒலிககும் அந்த மகத்தான நேரத்தில், மக்கள் குரலாய்—மதுர மொழிக் குயிலாய்—'எங்கள நாடு எங்களுக்கே!' என்று இங்கு கேட்கப்படும் பிரிவினைக் குரல் அங்கு ஏன் கேட்கப்படக் கூடாது?

இனி வருங்காலம் இளைஞர்களின் சொநதம்! 'நாளை'—நம்முடையது!

உலகெங்கிலும் வீறுகொண்டு எழுந்து வீரமுரசு தட்டியவர்களெலலாம ஒருமுகமாகச் சொல்கிருர்கள்—விடுதலை இயக்கங்களுககு 'இன்று'-'நேற்றை' விட 'நாளை' தான் முக்கியம்!

அந்த 'நாளை' எனும் கற்கண்டுக் கட்டியை 'இன்று' எனும் சாக்கடையிலேகரைத்து விட்டோர், எதிர் காலத்தை இருட்டறையாக ஆக்கிக் கொண்டோர்!

ஏற்கனவேயே அவர்கள் குருடர்கள். இருட்டிலே அவாகள் என்ன பாரக்க முடியும்?

எனவேதான் 'நாளை நாம் ஐ. நா செல்வோம்' என்றதும் அதை அவர்களால் நம்பமுடியவில்லை. 'நடக்குமா?'—என்று கேள்விக் குறி போடுகிருர்கள.

ஜான் மத்தாய் போன்ருேரது கருததுக்கள்தான், புரூதிவாரி இறைக்கும் அந்த நணபர்கள் எழுப்பிய கேள்விக் குறியை அழித் தெழுத வேண்டும்!

—(மா.)

பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள் 26-6-55 காலை வேலூர் வந்தபோது நகரசபை அளிக்கும் மகத்தான வரவேற்பைப் பெறுகிருர். நகர சபைத் தலைவர் சீதாபதி பி. ஏ, பி. எல். அருகேயிருக்கிருர்.

2. மாலை கோட்டைவெளி மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் நெடுஞ்செழியன் பேசினுர். வட ஆற்காடு மாவட்டச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி வரவேற்பிதழ் வாசித்தளிக்கிருர். அருகிலிருப்பவர் தோழர் ப. உ. சண்முகம்.

பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...

தங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

"கடிதமா இது? கதைபோலல்லவா இருக்கிறது!" என்று கிண்டலுகுக்குச் சொல்லுவோமல்லவா சில பெரிய கடிதங்களைப் பார்த்து, அப்படி எண்ணும்படியாக இரண்டு கடிதங்கள் வந்தன அலுவலகத்திற்கு. இரண்டும் இரண்டு கடிதங்களதான்; ஆனால ஒரே கதையைச் சொலலின. ரகசியம் எதுவுமில்லை; ஆனல் உபயோகம் அதிகம் உண்டு. இதோ, அவை:

★

இரு கடிதங்கள்

★

அன்புள்ள அண்ணா,

முதலில் நான் யார் என்பதை உங்களுக்குத் தெரிவித்து விடுகிறேன். நான் நல்லவன். இதை நான் சொல்லவில்லை. என் நண்பர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் நான் பிறந்த இடம் இருக்கிறதே, அதுதான் பொல்லாத இடமாம். இதை என் நண்பர்கள மட்டுமல்ல; நாட்டிலே நடமாடும் லட்சக் கணக்கான ஏழைகள் சொல்லுவார்கள். இப்போதுதான் புரிகிறது; நானும் அதைத்தான் சொல்லுகிறேன். ஆமாம்; நான் பிறந்த இடம் பொல்லாத இடம் தான்! அந்த மாளிகையிலே மோட்டார் இருக்கும்; பட்டாடைகள் இருக்கும்; தங்க நகைகள் குவிந்து கிடக்கும்; பணம் இருக்கும்; பணி செய்ய பலர் இருப்பர். ஆனல், என்ன சொல்வேன் அண்ணா, அங்கே இரக்கம் இல்லையே; நல்ல எண்ணம் இல்லையே; நீதி இல்லையே; நேர்மை இல்லையே! பொய் சொல்லவில்லை. படியுங்கள்:

அன்று பள்ளிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன. திடீரென்று அப்பாவின் அறையிலிருந்து ஏதோ சப்தம் எழுந்தது. ஓடிச் சென்று பார்த்தேன். அங்கே கோபம் பொறி பறக்கும் கொடிய கண்களுடன் அப்பா—அவரது முரட்டுக் கையிலே சிக்கிய வண்ணம் என் பள்ளி நண்பன் ரவி—எதிரே ஒரு சிறிய பணக் குவியல்! அதைக் கண்டேன். அப்பாவின் கோபத்திற்குக் காரணம் என்ன? நான் கேட்டேன், "என்னப்பா நடந்தது? ரவி என்ன செய்தான்?" என்று படபடப்புடன்.

"என்ன செய்தானா? பரிட்சைக்குக் கட்ட பணம் இல்லையாம்; கழுதை, யாசகம் கேட்க வந்து விட்டான்! படித்து 'ஜட்ஜா'கப் போவது வீணுகுதோ!" என்றார் அப்பா. அவருக்குக் கடுமையான கோபம்.

நான் ரவியைப் பார்த்தேன். பாவம், அவன் கன்னங்கள் சிவந்திருந்தன. கண்கள் கலங்கியிருந்தன. "அதற்காக அவனை அடித்தீர்களா, அப்பா?" என்றேன்.

"பின்னே என்ன கொஞ்சச் சொல்லுகிறாயா? 'திருப்பதி உண்டியலுக்கு ஐயாயிரம் தரப் போகிறீர்களாமே, பேப்பரில் படித்தேன். அதில் ஒரு பதினைந்து ரூபாய் தாருங்கள்; நான் படித்து வேலைக்குப் போனதும் பத்து ரூபாய் அதிகமாகத் திருப்பித் தந்து விடுகிறேன்' என்கிறான் இந்த அதிகப்பிரசங்கி. ஆண்டவனுக்கும் இந்த அனாதைக்கும் ஈடு கட்டுகிறான். சும்மாவா விடுவது இவனை?" என்று கர்ஜித்தார் அப்பா. மீண்டும் பாய்ந்தார். அவனை அடிக்கக் கையை ஓங்கினார். நான் தடுத்தேன். கண்ணைக் காட்டினேன். ரவி நகர்ந்தான். வெளியே போய்விட்டான்.

நான் அப்பாவிடம் கேட்டேன். கெஞ்சினேன். "ஏழைகளுக்கு செய்யும் உதவி பலன் தருமப்பா" என்று எடுத்துச் சொன்னேன். கேட்டாரா? என்னையும் திட்டினார். திருப்பதி உண்டியலுக்கு ஐயாயிரத்தை எண்ணத் தொடங்கினார்.

ரவி! அவன் புத்திசாலி. படிப்பில் புலி. பள்ளியில் முதல்வன். என் உயிர் நண்பன். அவனை நினைத்தேன். எனக்கு அழுகையே வந்து விட்டது. எங்கே போவான் அவன் பணத்திற்கு? அவன் தேர்வு எழுதவே முடியாதா? 'படிக்க வேண்டும்; படிக்க வேண்டும்' என்ற அவனது நினைவு பகற்கனவுதானா?— என்று ஏங்கினேன்! 'என்ன செய்வது?' என்று யோசித்தேன். பள்ளிக்குப் புறப்பட்டேன். அன்று தான் தேர்வுக்குப் பணம் கட்டும் கடைசி தேதி. என் தேர்வுக்கு அப்பா பணம் தந்திருந்தார். கட்டச் சென்றேன்...அடடா!...கடிதம் முடியவில்லை. அதற்குள் அப்பா வந்து விட்டாரே; ஆகவே இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். மீண்டும் பிறகு...

அன்புத் தம்பி,
முத்து.

★

இன்னொரு கடிதத்தைப் பிரித்தேன்.

அன்புள்ள அண்ணா,

ஒரு விசித்திரமான சம்பவத்தைத் தெரிவிக்க இக் கடிதம் எழுதுகிறேன். நான் ஏழை. பட்டினிக் கிடக்காத நாள்-ருசியான உணவு- இவையெல்லாம் நான் கண்டிராதவை. இந்த நிலையில் நான் தேர்வுக்குப் பணம் கட்ட வேண்டும். என்ன செய்வது? பெரிய மனிதராயிற்றே — பணக்காரராயிற்றே — என்று ஒருவரிடம் போனேன். தாராளமாகத் தந்தார். பணத்தையல்ல; அடிகளை! ஆனல், அவருக்கு மகனாக வாய்த்திருக்கும் முத்து, பெயருக்கேற்றபடி முத்துதான்!

பணம்தான் கட்டவில்லையே, பரிட்சை எழுதப் போகும் நண்பர்களையாவது பார்த்து விட்டு வருவோம்—என்று அன்று பள்ளிக்குச் சென்றேன். கையில் புத்தகங்களுடன்—பையில் ஒன்றுக்கு இரண்டாக பேனாக்களுடன் சாரை சாரையாகச் சென்று கொண்டிருந்த மாணவர்களைக் கண்டதும் எனக்கு அழுகையே வந்து விட்டது. விம்மினேன். பிறகு உணர்ந்தேன் நிற்பது பள்ளி என்று. வெட்கப் பட்டேன். அழுகையை அடக்க முடியவில்லை. குடிசைக்கு ஓடி விடலாமென்று திரும்பினேன். 'நேரமாகி விட்டது; தேர்வு அறைக்குப் போ ரவி' என்று எங்கிருந்தோ கத்தினான் முத்து. அதேசமயம் 'ரவி!ரவி!' என்று ஆசிரியரும் அழைத்து விட்டார். எனக்கு எதுவும் புரியவில்லை. நான் அறைக்குள் நுழைந்தேன். எனக்கென்று இடம் இருந்தது. ஆனல்... அறையிலே முத்துவைக் காணும். அவன் எங்கே? ஏன் இன்னும் அறைக்குள் வரவில்லை? ஐயையோ, அவனுக்கு இடத்தையும் காணோமோ?-என்று எண்ணினேன். அதற்குள் வினுத்தாள் வந்தது. எழுதினேன். நூற்றுக்கு நூறு என்பார்களே, அதுபோல கேள்விக்குக் கேள்வி சரியான விடையை எழுதினேன்.

தேர்வுகள் முடிந்தன. அப்புறம் தான் எனக்கு செய்தியும் புரிந்தது. முத்து தேர்வு எழுதவில்லை. எழுதவும் முடியாது. ஆமாம்; அவன் தேர்வுக்குப் பணம் கட்டவில்லை! தனக்கென்று அப்பா தந்த பணத்தை அவன் எனக்கென்று கட்டி விட்டான்! அதோ, அந்தத் தங்க நண்பன் வருகிறன். நான் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

தேர்வில் முதல்வனாக
வரப்போகும்,
ரவி.

★

இரண்டு கடிதங்களுக்கும் என்ன பதில் சொல்வது என்று யோசித்தேன். வள்ளுவர் நினைவுக்கு வந்தார்; பதில் தந்தார்.

"அன்பிலார் எல்லாம் தமக்
குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

ஆமாம்; அன்பு இல்லாதவர்களிடம் எத்தனையோ பொருள்கள் இருக்கும். ஆனல், அன்புள்ளவர்களிடம் இருக்கும் பொருள்கள் மட்டுமல்ல; அவர்கள் உடல்கூட மற்றொருக்குச் சொந்தம் போலவாம்! அத்தகைய சக்தி வாய்ந்தது அன்பு! அந்த அன்பு நெஞ்சம் கொண்ட ரவி, தனது தேர்வுப் பணத்தை—அதனல் ஒரு ஆண்டுப் படிப்பை — தன் உயிர் நண்பனுக்காக இழந்ததில் வியப்பென்ன? அவன் உண்மையிலேயே தங்கத் தம்பிதான்!

—சொர்ணம்

ஒன்றே...!

அருவி போல இன்பமே
அடையப் பெற்று மகிழவே
கருவி ஒன்றே வீட்டினில
காணும் மழலைச் செல்வமே!

★ வெற்றி வீரர்கள் ★

[கடை வீதிகளிலே—நடை பாதை ஓரங்களிலே—படை படையாகத் தம்பி தங்கைகள் வாடுகிறார்களே, அவர்களைக் காணும்போது நமக்கு எவ்வளவு வேதனை ஏற்படுகிறது! பள்ளிப் போட்டிகளிலே கலந்து கொள்ள வேண்டியவர்கள், இப்படி நாய்களோடு போட்டியிடுகிறார்களே, ஒரு கவளம் உணவுக்காக, பரிதாபம்! பரிதாபம்!!—என்று துடிக்கிறோம். கவலை தெரியாது கற்க வேண்டிய வயதாயிற்றே. இப்படி பட்டினியால் துவளுகிறார்களே, பாவம்! பாவம்!!—என்று ஏங்குகிறோம். ஆனல்... அந்த நடுத் தெரு பிள்ளைகளின் 'எதிர் காலம்' எப்படியிருக்கும் என்று நம்மால் முடிவு செய்ய முடியுமா? முடியவே முடியாது! அந்த வீடற்ற அனாதைகள், நாளை நாடு போற்றும் மேதைகளாக முடியும்; இன்று உலகத்தின் எந்த மூலையிலாவது உருண்டு கிடப்பவர்கள், நாளை புகழேணியின் உச்சிக்குப் போக முடியும்! "எப்படி முடியும்?... தப்பான நினைவு!" என்று உதட்டைப் பிதுக்கி விடாதீர்கள். "ஏன் முடியாது? அறிவுக்கும் முயற்சிக்கும் அனாதைபோட, பசிக்கும் பட்டினிக்கும் ஏது பலம்?" என்று கேட்கிறார்கள், இரண்டு வெற்றி வீரர்கள்: படியுங்கள்:]

அந்தத் தம்பிகள் இருவரும் சகோதரர்கள ; குணத்தில் தங்கக் கம்பிகள்; முயற்சியின் முழு உருவங்கள்; ஆனல் பிச்சைக்காரர்களைப் போன்றவர்கள; தெருக்களிலே அலைவார்கள; எதையோ தேடுவார்கள்; மண்ணுக்குள்ளே மறைந்து கிடக்கும் குதிரை, மாடு, பன்றி—முதலிய மிருகங்களின் எலும்புத் துண்டுகளைப் பொறுக்குவார்கள்; அவைகளைத் தூக்கிக் கொண்டு உரம் தயார் செய்யும் கம்பெனிகளுக்கு ஓடுவார்கள்; ஏதாவது சில்லரை பெறுவார்கள்; பிறகுதான சாப்பிடுவார்கள்! இப்படி செத்துப் போன மிருகங்களை நம்பி வாழ்ந்தார்களே, அவர்கள் பின்னல எப்படி ஆனார்கள் தெரியுமா? எத்தகைய விந்தையைக் கண்டு பிடித்தார்கள் தெரியுமா? இன்று இமைப் பொழுதில் பல மைல்கள பறந்து செல்லும் 'விஞ்ஞானப் பறவை'களைக் கண்டு மூக்கில் விரலை வைக்கிறோம், அந்த ஆகாய விமானங்களை முதன் முதலில் ஓட்டிக் காட்டியவர்கள் அவர்கள்தான்! இப்போது சொல்லுங்கள், யார் அவர்கள்?

விடை: ரைட் சகோதரர்கள்

'எழுக்காணி'

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:

(●) மு. கிருஷ்ணமூர்த்தி, திருப்பாப்புலியூர் [கடலூர் என். டி.]

எஸ். ஏ. பாரி; கட்டாக்.

(?) முரசொலி அலுவலக வாயிலில் மாட்டப்பட்டிருக்கும் பெரிய 'போர்டு' ஆங்கிலத்தில் அமைந்திருக்கிறதாமே, அது சரி தானா? இருக்கலாமா அப்படி? தமிழை அவமதிப்பதாகாதா?

அலுவலகத்தில் போர்டு அமைக்கும்போது தேவைப்பட்ட அலுமினிய உலோக எழுத்துக்கள் தமிழில் கிடைக்கவில்லை. அதனால் ஆங்கில போர்டு அமைக்கப்பட்டது. தமிழில் உள்ள சிறிய போர்டுக்குப் பதிலாக், பெரிய போர்டு ஒன்று தயாராகிக் கொண்டிருக்கிறது. விரைவில் மாட்டப்படும். அதோடு, தெலுங்கரும், மலையாளிகளும், தமிழ்தெரியாதவேற்று மொழிக்காரர்களும் அதிகமாக உலவிடும் மௌண்ட் ரோடில், உலகப் பொது மொழியான ஆங்கில போர்டு இருக்க வேண்டியது அவசியமாகிறது. ஆங்கிலத்தை மதிப்பது தமிழை அவமதிப்பதாகாது. ஏனெனில், தமிழின் உயர்வுக்காக பாடுபடும் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நாம்! ஆங்கிலமே உலகப் பொது மொழியாக இருக்க வேண்டுமென்றும் கூறுகிறவர்கள் நாம்! ஆங்கில போர்டு பற்றி கேள்வி கேட்ட அருமைத் தோழர்கள் அனைவருக்கும் இதுவே பதில் என்பதோடு, தமிழில் பெரிய போர்டு தயாராகி வருகிறது என்பதையும் தாழ்மையுடன் அறிவித்துக் கோள்கிறேன்.

அமுதன்; சென்னை.

(?) நேரு ரஷ்யாவிற்கு மாம்பழங்கள் கொண்டுபோனார். புல்கானின் இந்தியாவிற்கு வரும் போது என்ன கொண்டு வருவார்?

அவர் ஒன்றும் கொண்டு வரமாட்டார். அதற்குள் இங்கு தயாராகியிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் சாம்பலைத்தான் வாரி வழங்குவார்.

முல்லைதாசன்; சென்னை-21.

(?) புரட்சித் தந்தை லெனினுக்கு நேரு பூமாலை சாற்றியபோது, அவரது மனதில் அரும்பிய எண்ணம் எதுவாக இருக்கும்?

'அங்கு லெனினுக்குப் பின்னர் ஸ்டாலின் — இங்கு தனக்குப் பின்னர் யார்?' என்ற கேள்வியாகத்தான் இருக்கும்!

பி. மணி; திருச்சி.

(?) சினிமாவில் வேஷம் போடுபவர்களால் காங்கிரசை எதிர்க்க முடியுமா?-என்று உபயதுல்லா பேசியிருக்கிருரே; இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

அரசியலில் வேஷம் போடுபவர்களை சினிமாவில் வேஷம் போடுபவர்களால் ஏன் எதிர்க்க முடியாது? — என்று அவரையே திருப்பிக் கேளுங்கள்.

(?) இந்தியைக் கட்டாயப் பாடமாகத் திணிக்க வேண்டுமென்ற ஆச்சாரியார் இப்போது எதிர்பபது ஏன்?

சாகும்போது சங்கரனை அழைப்பதுபோல், அஸ்தமனமாகும் நேரத்தில் பொதுமக்கள் குரலுக்கு மதிப்ப வைப்பதாக ஒரு போக்குக் காட்டுகிருர், ஆச்சாரியார்! அவ்வளவுதான்.

அப்துல் ஹசன்; கொழும்பு.

(?) தென்னுட்டிலுள்ள கோயில் அர்ச்சகர்கள் தங்களுக்கு சென்னை மேல்சபையில் பிரதிநிதித்வம் வேண்டுமென்று கோருகிருர்களாமே?

ஆமாம்; அதற்காக அர்ச்சகர்களெல்லாம் சேர்ந்து காமராசருக்கு தூப தீப நெய்வேத்தியங்கள் காட்டினுலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை!

சோ. பழனியப்பன்; குளிபிறை.

(?) நேரு—புல்கானின் இருவரும் ஒருவரையொருவர் ரஷ்யாவில் தழுவிக்கொண்டதைப் போல, இங்கு காங்கிரஸ்காரர்களும், கம்யூனிஸ்ட்டுகளும் தழுவிக் கொள்வார்களா?

அப்படி தழுவிக் கோள்வதற்கான திட்டங்களைத்தான் டெல்லியில் கூடிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்யக் கமிட்டி தீட்டியிருக்கிறது. விரைவிலே இந்த ஆலிங்கனம் இந்தியாவின் சந்து பொந்துகளிலெல்லாம் தொடர்ந்து நடைபெறத்தான் போகிறது!

கண்ணன்; சென்னை-17.

(?) ஆவடி மாநாட்டுக்கும், திருச்சியில் நடக்கயிருக்கும் தி. மு. க. மாநாட்டிற்குமுள்ள வித்தியாசம் என்ன?

திருச்சியிலே நிமிஷத்துக்கு ஆயிரத்தைநூறு இட்லிகள் சுடும் இயந்திரம் இருக்காது; ஆனால் இலட்சிய உணவு வழங்கும் இனமுழக்கம் ஒலிக்கும்! ஆயிரக் கணக்கான கார்களின் அணிவகுப்பு இருக்காது; காளைகளின் அணிவகுப்புதான் கண்கோள்ளாக் காட்சியாக இருக்கும்!

அ. மணி; பரதூர்.

(?) காங்கிரஸ் கட்சி எதனால் வளர்ந்தது? எதனால் தேய்கிறது?

நாடெங்கும் விடுதலைக் கனலை மூட்டியதால் வளர்ந்தது! இன்று அந்தக் கனலிலே புனல் வார்க்கிற காரணத்தால் தேய்கிறது!

(?) ஆஸ்திகத்தின் ஆணிவேர் எது?

அச்சமும், அறியாமையும்தான்!

முத்துகிருஷ்ணன்; மேட்டுப்பாளையம்.

(?) மாஸ்கோ சென்ற நேரு திரும்பி வந்ததும் என்ன புதுமைகள் செய்வார்?

பல்கானினைப் போல அவரும் தாடிவைத்துக் கொள்வார். குருஷேவைப் போல தேபரும் மொட்டையடித்துக் கொள்ள வேண்டுமென்று கட்டாயப் படுத்துவார்!

தேவராசன்; சிறுதையூர்.

(?) ஆச்சாரியார் எதிலாவது வெற்றிமாலை குடியிருக்கிருரா?

திருமண மண்டபத்தில் அவர் சூடிக் கொண்ட மாலையைத் தவிர வேறு வெற்றிமாலை ஏதும் புனைந்து கொண்டதாகத் தெரியவில்லை.

சி. சின்னையா; கட்டுமோவடி.

(?) இன்றைய அரசியல் உலகிலே மோதிரக் கையால் குட்டுப் பட்டவர் யார்?

சாட்சாத் காமராசர்தான்! அவரையும் அவரது குழுவினரையும் காந்தியார் 'கிளிக்' என்று சொல்லி அவமானப் படுத்தவில்லையா?

(?) தர்க்கவாதம் புரிவோரும், குதர்க்கவாதம் புரிவோரும் மோதிக்கொண்டால் என்ன நடக்கும்?

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பிரஜா சேஷலிஸ்ட் கட்சியாரின் மாநாடு நடக்கும்!

கண்ணன்; குடந்தை.

(?) காற்றைப் பார்க்க முடியுமா?

முடியாது. ஆனால் சுற்றிக்கொண்டேயிருக்கும் கிருஷ்ணமேனனிடமிருந்து அதன் தன்மையை ஓரளவு உணரலாம்!

(●) கிருஷ்ணமூர்த்தி; கூடலூர்.

(?) ரஷ்யாவில் நேருவும், புல்கானினும் எதிலோ கையெழுத்திட்டார்களாமே, அது எதில்?

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மரண சாசனத்தில்!—

'நில் நண்பா! எங்கே ஓடுகிருய்?' என்ற எடுத்துக்காட்டு, அண்ணுவின் ஆசைத் தம்பிகள், அருமைத் தங்கைகளின் ஆருத் துயரத்தை அறிவுறுத்தியும், அரசியல் மேதைகளின் அறிவுத் திறனை அம்பலப்படுத்தியும் அமையப் பெற்றுள்ளது.

—சேர்மன், சென்னை.

புதையல் கதையில் வரும் எழுத்தைப் பெரிதாக இல்லாமல், சிறிய எழுத்துக்களில், அதை ஒரு பக்கம் அதிகமாகப் பிரசுரிக்கவும்.

—ஜி. நாராயணசாமி
புதுக்கோட்டை.

ஆசிரியரின் புதையல், புதையலை எடுத்து மகிழ்வது போல் உள்ளது.

—கி. சிவசாமி, ஆலங்காடு

'வேதனை துளைக்குது; வெண்புரு பறக்குது' என்ற 'பொன்முடி' யின் கொள்கை விளக்கக் கடிதமும், முல்லை-சத்தியின் 'வியாபார வனிதை'யும் எங்கள் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து விட்டன.

—ஜி. எம். மணிவண்ணன்
சென்னை-1

''கம்யூனிஸ்ட் கல்லறை'' இன்றைய கம்யூனிஸ்ட் நிலையை சித்தரித்து விளக்கப்பட்டுள்ளது. மேலும் 'பொன்முடியின் கடிதம்' ஓர் நல்ல விளக்கமாக வாராவாரம் வெளியிடுவதை பெரிதும் வரவேற்கிறேன். ''நேருவுக்கு அளித்த பிரிவு உபச்சாரப் பத்திரம்'' கற்பனை என்ருலும், அதன் சாரத்தைப் படித்துணர்ந்து காம்ரேடுகளும் தேசீய மடமையாளர்களும் சுய உணர்வு பெறுவார்களாக!

—மு. கி. புதுமைஒளி
புதுக்கோட்டை.

மகாபாரதம் தொடர் சித்திரம், புராணங்களிலும் இதிகாசங்களிலும் காணக்கிடக்கும் ஆபாசங்களையும் அக்ரமங்களையும் அப்பட்டமாக—ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற பாணியில் — எடுத்துக் காட்டுகிறது.

—என். சந்திரா
சிந்தாதிரிப் பேட்டை, சென்னை-2

'நேருவுக்கு பிரிவுபசாரம்'' உண்மையிலேயே, கற்பனைப்படி வாசித்தளித்திருக்கப் பட்டால் ஆசியஜோதியின் மானம் கப்பலேறியிருக்கும்.

—வேதப்பிரகாசம்
சென்னை-1

'முரசொலி'

சந்தா விபரம்

உள்நாடு-இலங்கை

ஆண்டு சந்தா	6-0-0
6-மாத சந்தா	3-8-0

வெளிநாடு

ஆண்டு சந்தா	7-0-0
ஆறுமாத சந்தா	4-0-0

மூன்று மாத சந்தா கிடையாது.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4/128, மவு[illegible]ட்ரோடு, சென்னை-6.